கிறிஸ்தோபகாரி.

THE CHRISTIAN FRIEND.

2. ஐப்பசிமாதம். 1870.

BRIEF SKETCH OF THE AMERICAN MISSION.

இலங்கையிலுள்ள

அமேரிக்கன் மிசியோன் சரித்திரப் போழிப்பு.

(தொடர்பு.)

மிசியோன் திருத்தியங்களை நடத்துவதற்குப் பூர் ஐயருக்கு கல்லை உபயோகியும், இறிஸ்துமார்க்கத்துக்கு ஓர் நல்ல திருஷ்டாந்தமாயும், இடைவிடாத மோட்ச இன்பத்தை எதிர் பார்த்துக்கொண்டவனுமாகிய பூர்அம்மாள் பல வாரங்களாய்த் துன்பப்படுக்கையில் மிருதியாயும் வருந்தி, கடவுடம்மை நெற்றை மீ உசுக் டீ வைகறைப்போதில் மரித்து, அன்று சாய்ந்தரம் தெல்லிப்பழை மிசியோன் ஸ்தானத்தில் அடக்கம்பண்ணப்பட்டாள். இந்த மரணம் மிசியோனரிகளுக்கு ஓர் பெருஞ் சஞ்சல சம்பவமாயும், மிசியோன் திருத்தியங்களுக்குச் சற்றே இடராயுமிருந்தது. பூர் ஐயரோ அதிக வியாகுலமும் மன எழுச்சியுடனுஞ் சனங்களுக்குட் பிரயாசப்பட்டார்.

இவ்வாண்டு தித்திரை மீ உசுக் திகதி யோடன் லோட்ஜ் (Jordan Lodge), நாத்தானியேல் நைல்ஸ் (Nathaniel Niles), சார்ல்ஸ் ஓட்ஸ் (Charles Hodge), ஒனிஸ்மஸ் (Onesimus), எபினிசர் போட்டர் (Ebenezer Porter), என்னும் ஐந்துபேர் திருச்சபையுடன் சேரும்படிக்கு பரிசோதிக்கப்பட்டார்கள். இந்த ஐவரும் மிசியோனின் முதல் வினைச்சற் பலனுயிருந்தபடியால், மிசியோனரிகளுக்குத் தைரியமாயும் அதிக சந்தோஷமாயுமிருந்தது. ஆதலால் அவர்கள் எல்லா மிசியோனரிகள் சமுகத்திலும் பரிசோதிக்கப்பட்டு, திருச்சபையுடன் சேரப் பக்குவரெனக் காணப்பட்டார்கள். சபையாரின் இராப்போசனக் கூட்டத்துக்கு ஏழெட்டு காட்களுக்கு முன்னே, சார்ல்ஸ ஓட்ஸ் என்பவர் தனிமையாய்ப் பூர் ஐயரிடஞ்சென்று, ஐயா, என் பெண்சாதியுமழியார் ஒருமித்து, என்னேபும், என் பெண்சாதியையும் பிரித்துப்போடத் தீர்மானித்திருக்கிறர்களென்று அதிக சஞ்சலத்துடன் தெரிவித்தார். பூர் ஐயர் அதற்குத்தரமாக, த கொரிஏம்: அதி. 13ம் வாக்கியத்தை வாசித்து, விபரித்துக்காட்டித், தேற்றரவுபண்ணினார். சார்ல்ஸ ஓட்ஸ் என்பவரோ நான் இறிஸ்தவருக வேண்டுமென்ற தீர்மானம் பண்ணிக்கொண்டேன். எனினும் [illegible] அதிகப்படுகிறபடியால் கொஞ்சக்காலம் பொறுத்துச், சபையுடன் சேர இருக்கிறேனென்றார். அ

வரோ குடிருலத்தைச் சேர்த்தவராயும், சற்றே படிப்பாளியாயுமிருந்தார். எதிரிடையாயிய புயலுக்கு எதிர்த்து நிற்கத் திராணியற்றவராய்ப் பின்போட்டு, மூன்று வருஷத்திற்குப்பின் திருச்சபையுடன் சேர்ந்து, அநேக வருஷங்களாகக் கிறிஸ்தவனாக நடந்தும், பிற்காலத்திற் பற்பல சைவாகமங்களே வாகித்தகனுலே கிறிஸ்துமார்க்க உபதேசங்களேக்குறித்துச் சங்தேகங்கொண்டார். மரிக்கும்போதும் கிறிஸ்தசபையிலிருந்து தள்ளப்படவில்லே.

ஓனிஸ்மஸ் என்பவர் கல்வியறிவில்லாத கோழைத்தனமுள்ளவர். அவருடைய எசமானனும் இனத்தவர்களுந் திரண்டு, அவரிடம்போய் நீ வேலுச் (சான்ஸ் ஒட்ஸ்) சட்டம்பியாரைப்பார்த்து விடவென்று சொல்லித், தடைசெய்தாலும், அவரோ ஒல மாதங்களுக்குள் யேசு இரட்சகரில் விசுவாசித்துத் திருச்சபையுடன் சேர்ந்து, அந்நாள் முதல் மரணபரியந்தம் செபத்தில் உறுதியாய்த் தரித்து, இடைக்கிடை உபவாசித்தும், தன் நீடிய ஆயுட்காலமெல்லாம் விசுவாசத்துக்குச் தொடர்ச்தேற்றிக்கும் கல்லகல்ல திருவசனார்தங்கள் காண்பித்து, மூடிவுபரியந்தம் கிறிஸ்த ஒளியாகவே அஞ்ஞானிகளின் முன் பிரகாசித்து மரித்துவிட்டார்.

போட்டர் அக்காலத்தில் ஓர் டன்லி மானுக்களுயிருந்தார். அவர் அப்போது ஒலவ கடைப்பிழைகளினிமித்தம் சபையுடன் சோராது நிறுத்தப்பட்டுக், கொஞ்சக்காலஞ் சென்றபின்போ சேர்க்கப்பட்டு, உபதேசியாக ஏற்படுத்தப்பட்டுக். கிறிஸ்துவின் திருத்தொண்டை நடத்திவந்தும், ஒல கடைப்பிழைகளுக்காக மிசியோன் பணிவிடையிலும் திருச்சபையிலுமிருக்தும் நீக்கப்பட்டும் பின்பு சபையுடன் சேர்க்கப்பட்டுக், கிறிஸ்தவனுகவே நடந்து மரித்துவிட்டார்.

யோடன் லோட்ஸ் என்பவர் சபையுடன் சேரவிருப்பதை மாதாக் கேள்விப்பட்டு, ஓர் சனிக்கிழமை சாயந்தரம் கூக்குரல்பண்ணிக்கொண்டு, மிசியோனரிவீட்டுக்குப்போய், என் மகன் ஞானஸ்நானம் பெறுவானேயாகில் அச்சணமே என்னினத்தார், சனத்தார், சாதியார், எங்களேத் தள்ளிப்போவோர்கள், நான் அதற்குச் சம்மதிக்கமாட்டேனென்று சொல்ல, மிசியோனரி மகனேயும் மாதாவையும் நோக்கி, வேதபோதகத்தை எடுத்துச் சொல்லித், திடப்படுத்தினுர். அவர் மகனே நோக்கி, நீ யேசுவின் கட்டளேக்கு அமையப் போகிறுயா? அல்லது மாதாவின் கூக்குரலுக்கு இசையப்போகிறுயா? நீயே தெரிந்துகொள்ளென்றுசொல்ல, மகன் மாதாவை வெளியே அழைத்துக்கொண்டுபோய், ஆற்றித் தேற்றி, நான் யேசுவுடனிருக்கிறேன் போய்வா, என்று சொல்ல,-மாதாவோ இன்றுமுதல் நீ எப்போவென்கிலும் என் வீட்டுக்குவர இடங்கிடைக்கமாட்டாதென்று சொல்லிப் போய்விட்டாள். அக்காட்சியோ மகா பரிதாபமாயிருக்தது. யோடனின் பிதா அப்போழுது பிற ஊருக்குப் போயிருந்தார். போகமுதல், அவர் ஞானஸ்நானம் பெறத் தன் மகனுக்கு உத்தரவு கொடுத்திருந்தபடியால், அவரும், நாத்தானியேல் கைல்ஸ் என்பவரும் ஒரே தினத்தில் ஞானஸ்நானம்பெற்றுத் திருச்சபையுடன் சேர்க்கப்பட்டார்கள். அவர் ஒருவருஷம் வட்டுகோட்டைச் சாஸ்திர சாலேயிற் கல்விகற்றுப் பின் படிப்பிக்கப்பட்ட ஓர் உத்தம கிறிஸ்தப்பெண்ணே விவாகம்பண்ணினுர். அதன்பின் உடி வருஷக்காலமாக உபதேசியாகவிருந்தார். கஅடிடி வருஷம் அவருடைய மனைவி மரித்தாள். பின்பு தன் கடையை இழந்து, பத்துவருஷம் காலமாகச் சபைக்குத் தூரப்பட்டிருந்தார். கடையிலே அவருடைய தன்பப்படுக்கையிலுண்டான உபா

திகளோ அவரைப் புடமிடும் உலைமுகம் போன்றிருந்தது. அவருடைய பிள்ளைகள் அதிக பட்சங்காட்டி, நடத்தினதுமன்றி ஓயா விழிப்புடன் அவர் நிமித்தம் பண்ணிய பிரார்த்தனைகள் கேட்கப்பட்டன. அவர் இரட்சிக்கப்பட்டாரென்று நம்புகிறோம்.

ஸல்ஸ் என்பவர் தான் திறிஸ்தவனுகப் போதகஞ்செய்கையைத் தன்னினத்தார் சனத்காருக்கு அறிவித்து வரவேண்டுமென்று சொல்லிப் போய்த், தன் ஒரே சகோதரிக்குமாத்திரம் இரகசியத்தில் அறிவித்துச், சம்மதம்பெற்றதற்கும்பினபின், இனத்காரும் அயலகத்காரும் இதுசெய்தியைக் கேள்வியுற்று, அவரை மிகியோனுரிவசம் ஒப்பித்த பெற்றூரை மிலேச்சரென்று சொல்விக்கொண்டார்கள். இவர் திருச்சபையுடன் சேர்ந்து, கொஞ்சக்காலஞ் சென்றபின் பிரசங்கி உத்தியோகம்பெற்று, நானுகாரியங்களிலும் ஈற்காட்சி கொடுத்து, இக்காலனவும் மிகியோன் தொண்டிலேற்பட்டிருக்கிறார். இவர்கள் திருச்சபையுடன் சேர்ந்த அன்றைத்தினம் ஸ்கட்டர் வைத்தியரின் வைத்திய மாணுக்கனுயிருந்த உலாந்தா வமிசத்தானுகிய சோர்ச்சுக் கோக் (George Koch) என்பவரும் திருச்சபையுடன் சேர்ந்தார். கொழும்பிலிருந்து இவ்விடம் வந்திருந்த கன. சேற்றர் (Rev. C. Chater) என்னும் பப்திஸ்த் மிகியோனரி இரசுபோசனத் திருவிருந்தைப் பரிமாறினர். அங்கிலேய குருவும், அமெரிக்கன் குருமாரும், யாழ்ப்பாண வாசிகளும், யேசு இரட்சகரின் திருப்பந்திக்கு ஒருபந்தப்பட்டுச் சேர்ந்தது யாவருக்கும் அரிக பூர்த்தியைக் கொடுத்தது.

அவ்வாண்டு வைகாசி மீ 6ந்திக, ஸ்கட்டர் (Dr. J. Scudder) வைத்தியர் யாழ்ப்பாணத்து உவெஸ்லியன் கோவிலில் குருவபிஷேகம் பெற்று, அத்தருணங் கூடியிருந்த பற்பல பகுதியாரான திறிஸ்த குருமாரால் வலக்கரங்கொடுத்தழைக்கப்பட்டதும், மிகியோனுக்குத் தைரியமூட்டுணுயுமாயிருந்தது.

அக்காலத்தில் போட்சங்கத்தாரிடமிருந்து மிகியோனரிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் பல, எவ்விதமோ கெட்டிழந்துபோனபடியாலும், பணவருமானம் குறைந்துபோனபடியினுலும், மிகியோனரிகள் இங்கிலந்திலுள்ள சேர்ச்சு, உவெஸ்லியன் (Church, Wesleyan) மிகியோன் சங்கங்களிடம் உண்டியல்கள் கடனுகவாங்கி மாற்றிக், கொஞ்சக்காலஞ் செலவுபண்ணினர்கள். அவ்வாண்டு ஆவணிமாதம்வரையில் இ மிகியோன் ஸ்தாபனங்களும், உடு நிராமப் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. நிராமப் பள்ளிகளில் 2,000 மாணுக்கர் மாணுக்கிகளும், ஆதானங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மிகியோன் தருமப்பள்ளிகளில் 60 பேருங் கல்வி கற்றுர்கள். அந்தந்தப் பள்ளிக்கூடங்களே அந்தந்தக் நிராமங்களில் சுவிசேஷ விருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமான கைத்தாயர்கள் எனக் கண்டு, அப் பள்ளிக்கூடங்களிலிருந்தே சுதேச உவாத்தினர், உபதேசிமார், பிரசங்கிமார் முதலானேர் எழும்புவார்களென்று நம்பி, மிகியோனரிகள் பிரயாசப்பட்டு வந்தார்கள்.

இதற்குக் கொஞ்சக் காலத்துக்குமுன், மலையப்பர், காபிரியேற்பிள்ளை, நீக்கிலாசப்பிள்ளை என்னும் மூவரும் சுவிசேஷ பிரசங்கிகளாக நியமனம் பெற்றுச், சுவிசேஷ ஊழியத்தை நடத்திவந்தார்கள். எதிராளியாயிய பசாசின் சொச்சேதங்கள் சற்றே குறைந்தன.

அவ்வாண்டு ஆவணி மீ 6ந்திகன வைவெட் ஐயர் தேக சவக்கிய

வினத்தினிமித்தம் வேம்பா, கற்குத்தா, பீலுக்கு முதலான இடங்களுக்குச் கடல்யாத்திரை பண்ணிப்போய் வர, இவ்விடம்விட்டுப் புறப்பட்டார். ஆதலால், கன. ஊபோல்டிங்கு ஐயர் அன்றைத்தினம் மானிப்பாய் மிஷியோன் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டு, அவ்விடம் வாசம்பண்ணப்போனார். ஊடுவட் ஐயர் கொஞ்சக்காலம் கற்குத்தாவில் வாசம்பண்ணுகையில் ஆரோக்கியமும், அவ்விடத்து உதாரத்துவமுள்ள பெரிய மனுஷரின் உதவி சகாயமும்பெற்று, கஅஉஉ ம் ஆண்டு ஆனி மீ கசுஃ திகதி இவ்விடம் வந்துசேர்ந்தார்.

இப்படியிருக்கையில் அமெரிக்கன் போட்சங்கத்து லிகிதராயிருந்த உள்தர் (Dr. Worcester) என்னும் பண்டிதரும் இறந்துவிட்டார். அவர் அஞ்ஞானிகளுக்கு மிஷியோனரிகளே அனுப்பும்படி வேண்டிய பிரயத்தனங்கள் எல்லாவற்றையுஞ் செய்ததுமன்றி, இவ்விடத்துக்குவந்த மிஷியோனரிகளின் யாவரையும் முகாமுகமாயறிந்து, அவர்கள் தங்கள் இனத்தார், சனத்தார், வீடுவாசல், சொனதேசம் முதலான யாவற்றையும் விட்டு, கெடுத்தாப் பிரயாணம் பண்ணினதினிமித்தம் அவர்களுடன் இடைவிடாது அனுதாபசிந்தைகொண்டு, அவர்கள் நிமித்தமும், அஞ்ஞானிகள் நிமித்தமும், உடன்படிக்கையின் தாதனுடன் பிரார்த்தனை மூலமாய் வாதாடி வந்தவருமாயிருந்தார். அப்பெயர்ப்பட்ட நல்லுபகாரி இறந்துவிட்டசெய்தி மிஷியோனரிகளின் செவிக்கு இடிபோலத் தொனித்தது. ஆயினும் "நான் இல்லவேற்புத்திரருக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ அவர்களைக் கொண்டுவருவாயாக, நான் உன்னுடனிருப்பேன், திடங்கொள்" என்று பூருவகாலத்தில் வனந்தரத்திற் கூறுபட்ட வாக்கினால் மிஷியோனரிகள் தேற்றப்பட்டார்கள். இவ்விடத்தில் அமெரிக்கன் மிஷியோனை ஆரம்பித்த காலவரில் ஒருவரும் அவர்களுக்குள் வயதில் முதிர்ச்சையருமாகிய கன. றிச்சாட்ஸ் ஐயரும் அடுத்தவரை மீ கச திகதி "என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்று சொல்லி மரித்தார், பூர் அம்மாளின் பிரதேசே மேத்துக்கருகே அடக்கம்பண்ணப்பட்டார். இதுவும் மிஷியோனரிகளுக்கு அடியின்மேலடி போடப்பட்டாற் போலிருந்தது.

கஅஉஉ ஆம் முற்கூறில் பெரும்பான்மைபற்றிச், சுதேசக் கிறிஸ்தவர்களுக்குள் யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஓர் வேதாகமசங்கம் வைக்கப்பட்டது. அவ்வாண்டு ஐப்பசிமாதத்திலும் அத்தன்மையான ஓர் கூட்டம் மல்லாகக் கோவிற்பற்றிலும் வைக்கப்பட்டது. மிருதிபற்றி அஞ்ஞானிகளே அக்கூட்டத்திற் சமூகமாயிருந்தார்கள். அவ்வாண்டின் கடைத்தினமாகிய மார்கழி மீ உகஃ திகதி, தாய்ச்சங்கத்துக்கு ஓர் உதவி வேதாகமசங்கம் யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. தமிழரும், பறங்கிகளும், ஒல்லாந்தரும், அங்கிலேயரும், அமரிக்கரும், மாதமோர் மின்னபேதமின்றி, சங்கத்தின் அங்கத்தவராஞர்கள். இச்சம்பவம் வேதசத்திய பிரபலித்தியை எதிர்பார்த்தக்கொண்டிருந்த மிஷியோனரிகளுக்கு அதிக பிரீதியையும், பூர்த்தியையுங் கொடுக்கத்தக்கதாயிற்று. வருடாந்தம் பத்துப்பன்னிரண்டு பவுண் கையொப்ப மூமாய்ச் சங்கத்துக்குக் கொடுக்கப்பட்டது. அப்பொழுது வேதபுத்தகத்தையும் அதின் பிரதிகளையும் பிரயத்துக்கு வாங்கும் விருப்பமும் பழக்கமும் உண்டுபட்டது.


இவ்விதமே மிஷியோன் ஸ்தாபிக்கள் ஏறுதேறிவருகையில் அவ்வாண்டு உவாக்கிபேதி கோம் உண்டுபட்டு, அதிக மும்முரங்கொண்டு, கூ ஒ மா

கல்வனாய் ஆயிரக்கணக்காய், அதேகரை வாரியன்னிக்கொண்டு போனதினாற் பன்னிக்கூடங்கள் குழம்பிற்று. அதேக பிள்ளைகள் இறந்தார்கள். மிசியோனரிகளோ தேவனுடைய இருபயிலுலே காக்கப்பட்டார்கள். இதுவே அழிய நன்றியறிதலான ஸ்தோத்திரஞ் சொல்வதற்குக் காரணம்.

அக்காலத்தில் அறிவு சனங்களுக்குள்ளே மெல்லமெல்லப் பரம்பிற்று. ஒய்வாட்களில் முன்னேரம் மிசியோன் ஸ்தானங்களில் தேவராதனை கடத்தியபின், பின்னேரத்தில் சு மிசியோனரிகளும், சு சுதேச சுவிசேஷ பிரசங்கிகளும், கடு, உ0 தருமப்பள்ளி மாணுக்கரும், கிராமங்கள், சந்தைகள், வயல்வெளிகள், தெருக்கள், வீடுகள் முதலான இடங்களுக்கு இருவர் இருவராய்ச் சென்று, சனங்களைச் சந்தித்து, வேதப் பிரதிகள், சிறு புத்தகங்களைக் கொடுத்தும், சுவிசேஷ வாக்கைப் பிரசங்கம்பண்ணியும் வந்தார்கள். இவ்வழக்கம் ஆயிரக்கணக்கான பெயர் வேத சத்தியங்களை அறிந்து கொள்ளவும், தருமப்பள்ளி மாணுக்கரைச் சுவிசேஷ பிரசங்க அலுவல் பயிற்றுவதற்கும் நல்ல வழிவகையாய் இருந்தது.

அவ்வாண்டு மார்கழி மீ உடுக் திகதி மிசியோன் பெண்பாடசாலையிலிருந்து உ பெண்பிள்ளைகள் முதன்முதலில் திருச்சபையுடன் சேர்க்கப்பட்டார்கள். அவர்களிலொருத்தி பெயர் மிராண்டா சல்வேட் (Miranda Safford), மற்றவள் பெயர் மேரி பூர் (Mary Poor). இவ்விரண்டு பெண்பிள்ளைகளும் வாசிப்பித்து தேறும்படி படிப்பிக்கப்பட்டவர்கள். அதித்த சித்திரை மீ உகந் திகதி பண்டத்தெருப்பிலிருந்து ஒருவனும், உவிலிலிருந்து உ ஆண்களும் உ பெண்களுமாக, ஐந்துபேர் திருச்சபையுடன் சேர்க்கப்பட்டார்கள். அன்றைத்தினம் கனம். உலின்கலோ துயினின் பிள்ளையொன்றும், சுதேசபையாரின் பிள்ளைகள் ஐந்துபேருமாக, ஆறுபிள்ளைகள் ஞானஸ்நானத்தினுல் தேவகரவிசாரணைக்கு ஒப்பிக்கப்பட்டார்கள். இச் சம்பவங்கள் அந்திய தேசத்தில் அஞ்ஞானிகளுக்குள் ஆத்தும காலவாளிகளாக இருந்த மிசியோனரிகள் அக்களிப்புக்கொண்டு தேவனை ஸ்தோத்திரிக்க இடமாயின. அஞ்ஞானிகள் பலரும் இலைகளைக் கண்டு, தங்களுக்குள்ளிருந்து சிலர் கிறிஸ்தவர்களாவதும், தங்கள் பிள்ளைகளைக் கையில் ஏற்றிக்கொண்டுபோய் ஞானஸ்நானம் கொடுப்பிப்பதும், என்னவாய் முடியப்போகிறதென்று சொல்லியும், அதிசயித்தும், தலையசைத்துப், பகிடி பரியாசம்பண்ணியும், எதிர் நியாயஞ்சொல்லியும், பயமுறுத்தியும் வந்தார்கள். இவ்வாண்டு முடிவில் எ பேர் சுதேசக் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள்.

(இன்னும்வரும்)



ROMANISM.

ரூமான் மார்க்கம்.

Christ is the head of Christianity; the Pope of Romanism:—கிறிஸ்துமார்க்கம் தன் போதனையையும் பெயரையும் தன் தலவராகிய கிறிஸ்துவிடத்திலிருந்து பெற்றுக்கொண்டது. ரூமான் மதமென்னும் பாப்புமதமோ தன் போதனையையும், அதிகாரத்தையும், பெயரையும், பாப்புவிடத்

நிலும் அவரது வாரிசானத்திலுமிருந்து பெற்றுக்கொண்டது. கிறிஸ்தவனே கிறிஸ்துவின் சீஷன், ரோமானிஷனே பாப்புவின் சீஷன்.

Christ the founder of Christianity; Popes and Cardinals of Romanism :— கிறிஸ்தமதம் கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலரினாலும் ஸ்தாபிக்கப்பட்ட சமயம், அதன் வித்தாகத்தங்கள், புதியேற்பாட்டில் அடங்கியிருக்கின்றன. ரோமை மதமோ பாப்புமாரினாலும் உதவிப் பாப்புமாரினாலும் (Cardinals) குருப்பிரதானிகள் கூட்டங்களினாலும், ஸ்தாபிக்கப்பட்டு மனிதருடைய பாரம்பரைகளினாலும், நிர்த்தைகிடமான கட்டுக்கதைகளினாலும், அபத்தமான மாயோபாயங்களினாலும், மாரீச அற்புதங்களினாலும் ரூபிக்கப்பட்ட மதமேயாம்.

Christianity teaches love to enemies; but Romanism hatred :— கிறிஸ்தமதம் உங்கள் சத்துருக்களை நேசித்து உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்து உங்களை நிந்தனைபண்ணித் துன்பப்படுத்துகிறவர்களுக்காகச் செபம்பண்ணுங்கள் (மத். ரூ : சஷ.) என்று சொல்லுகிறது. ஆனால் ரோமான் சமயமோ அப்படியல்ல, "சத்துருக்களும் சமயபேதமானவர்களும் சபையில்லின்று நீக்கப்படவேதுமன்றிக், கொலைசெய்யப்படுவதும் நியாயமென்று சொல்லுகின்றது. ஒருவன் ரோமான் கத்தோலிக்கச் சமயத்திலே கொண்டவைராக்கியத்தினுலே தண்டப்பட்டு, அச்சபையினின்று நீக்கப்பட்ட யாதொருவனைக் கொலைசெய்வானேயானுல், அவன் கொலைக்கேதுவான குற்றவாளியாகனென்று இரண்டாம் எர்பன் (Urban) என்னும் பாப்புத் தீர்ப்புப்பண்ணியிருக்கிறார். ரோமை விசுபுமார் குருமார் ஒவ்வொருவரும் குருப்பட்டாபிஷேகம் பண்ணப் படும்பொழுது தன்தன் மாகானத்திற்குட்பட்ட ஒவ்வொரு பதினேயும் எதிர்த்துத், தண்டப்படுத்திக், கொலைசெய்து, நிர்மூலமாக்குவேனென்று ஆணையிட்டு, உடம்படிக்கைபண்ணக், கடமைப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

Christianity demands honesty, and uprightness on the part of its professors in all their dealings with their fellow-men ; but Romanism says," No faith or promise to be kept with heretics:"— கிறிஸ்துமார்க்கம் தனது பரிசுத்த பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிற சகலரும் உண்மையும் யதார்த்தமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று கற்பிக்கின்றது. மனிதர் ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளே வாக்கினுலாவது, உடன்படிக்கையினுலாவது பண்ணிக்கொள்ளும் எவ்வகை ஏற்பாடுகளேயும் அவரவரே தவறுதலின்றிக் கைக்கொள்ள வேண்டுமென்று, மகா உறுதியாய் அது நமக்குக் கற்பிக்கின்றது. ஒருவருக்கொருவர் நேசத்தினேலல்லாமல் மற்றெவ்வகையினுலாவது கடன்படாதேயுங்கள் என்று, உரோ. கசு: அ. கூறுகின்றது. ஆனுல் ரோமை மதமோ ஒருவன் ஒரு பதினெட்டத்திலே சொன்னவனின் பேரிலாவது, உடன்படிக்கையின் பேரிலாவது, பண்டமாற்றுலாவது, இரவலாகவாவது, யாதேனும் கடன்பட்டிருப்பானேயானுல், அப்பதினெனுக்குச் சத்தியவாக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவ்வாக்கை நிறைவேற்ற இவன் கடமைப்பட்டவனல்லவென்று, Maynooth, Ireland என்ற இடத்திலே குரு உத்தியோகத்துக்கென்று படிப்பிக்கும் கல்லூரியிலே பாவிக்கப்படும் பொழிப்புரைப் புத்தகமாகிய Lord's Maynooth என்னும் புத்தகத்தில் அம் பக்கத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

Romanism forbids her clergy to marry; but Christianity does not.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமார் மற்றுஞ் சகல மனிதர்களையும் போலவே விவாகம் பண்ணுவதும் விவாகம் பண்ணமலிருப்பதும் அவரவர் விருப்பத்தின்படி செய்யலாமென் பதே நிச்சயமாக்கொண்டார்கள். பேதுரு விவாகம்பண்ணினவராயிருந் தார். பவுலுக் தன் விருப்பத்திற்கு விடப்பட்டார். (க. நி.மோத்தேயு, கு. அதிகாரம், உ, கo.உக.). ரோமை மதமோ தன்னைச் சேர்ந்த குருமார்களெவருக் கும் விவாகத்தை விலக்கி, அவர்கள் விரும்பினலுஞ் சரியே, விரும்பாதிரு த்தலுஞ் சரியே, அவர்களெல்லாருக்கும் பிரமசரியத்தைக் கட்டளையிடுகி ன்றது. இதைகளெல்லாவற்றையும் வாசித்துப் பார்த்தால், இதனல் மார்க்கத்துக்கு உண் டுபட்ட அவகீர்த்தி எவ்வளவென்பதை அறியலாம். ரோமை மதத்தவனுகி ய (Baronius) என்னும் சரித்திராசிரியன் தான் எழுதின பத்தாம் நூறு ண்டின் சரித்திரத்திலே மற்றைய காரியங்களுடன் சொல்வது என்னவென் ருல், குருமாரின் வீடுகள் கூத்தாடிகள் கூட்டத்திற்கும் வேசைகளுக்கும் பள் ளிக் கூடங்களாய் இருக்கின்றன. பரிசுத்த குரு அரசாட்சி அவதூறுக் தாறு மாறுமூன்ன இரண்டு ஸ்திரிகளின் கொடுமைக்குள் அகப்பட்டுக்கொண்டது. எப்படியெனில், பேதுருவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பாப்புமார் அவ ர்களுடைய கண்காணாய் இருப்பினுருனென்கிறார். பிறஞ்சு, ஸ்பானியா, இங்கிலாந்தென்னும் தேசங்களிலேயும் ஏறக்குறைய ஜரோப்பாவிலுள் ள மற்றெவ்வொரு தேசத்தினருக்கு மார்க்காசாரமடங்களென்று மானிசமாய் அழைக்கப்பட்ட சன்னியாசி மடங்களெல்லாம். காலத்திற்குக்காலம், அர சாட்சியாரால் ஒடுக்கப்பட்டதற்குக் காரணமென்ன?

Christianity teaches Justification by faith; but Romanism by work:— கியாயப்பிரமாணத்தின் கிரியைகளினல்லக் நிறைதுவிலே வைக்கு ம் விசுவாசத்தினலேயே மனிதன் நீதிமானுக்கப்படுகிறனென்றும், விசுவா சத்தினின்று தோன்றுத யாவும் பாவம் (ரோமர் ஙச: உஉ.) என்றபடி சற் கிரியைகள் விசுவாசத்தின் பலனுய நீதிமானுனதின் பிற்பாடு உண்டாவதே யன்றி, அதற்குமுன் ஒருபொழுதும் உண்டாகாத என்றும், நிறைந்த சமய ஞ் சொல்லுகின்றது. அனல் ரோமை மதமோ ஒருவன் தன் செபத்தினலு ம், நோன்புகளினலும், கிலிருத்தியல்களையும். கேர்த்திக்கடன்களையுஞ் செ ய்து முடிப்பதினலும் Grace de Congruo என்பதைப் பெறுவதற்குத் தன்னைத் தகுக்தலுக்கினதின் மேல், தனது சொக்குப் பிரயாசத்தினுற்கொ ஞ்சமும், தான் குருமாருக்குப் பணங்கொடுத்து வாங்குகின்ற சுத்தவாளரின் புண்ணியங்களினுற் கொஞ்சமும், நிறைந்துவின் கிரியைகளினுற் கொஞ்ச முமாக Grace de Condigno என்பதைப்பெற்று மோட்சத்தையடைகிறன் என்பதாகச் சொல்லுகின்றது.

Christianity offers salvation to every one without money and without price; but Romanism sells it at certain prices to certain individuals:—மோட்சம் ஒரு சுவி, நித்திய தேவனுடைய கொடை, இர ட்சிப்பு ஒவ்வொருவனுக்கும் பணமின்றியும் கிரயமின்றியும் இலவசமாக க் கொடுக்கப்படுகின்றது என்று, நிறைந்த சமயம் கூறி அறிவிக்கின்றது. (எசாயா, சுடு: க. யோவான், கஎ: கூ. வெளிப்படுத்தல், உஉ: கஎ. முதலா னவைகளைக் காண்க). ரோமை மதம் தான் கொடுப்பேனென்று பாசாங் குபண்ணுகின்ற இரட்சிப்போ, பணம், கிரயமின்றி இலவசமாயப் பெற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

Digitized by Siva Siva Foundation

ரோமான்மார்க்கக் கொள்கைப்படி பயங்கரப்பட்டதக்க அருட் தவசக்தும், உத்தரிக்கும் ஸ்தலத்திலே கொடிய ஆக்கினைகளுக்கும், உடன்பட்டவனும் இருக்கிறான். உலகத்திலே நடமாடுகிறதற்காகப் பணங்கொடுக்க வேண்டியவனுயிருக்கிறான். உலகத்தை விட்டுப்போகிறதற்காகப் பணங்கொடுக்க வேண்டியவனுயிருக்கிறான். உலகத்தைவிட்டுப் போனதின்பிற்பாடும் தன் ஆத்துமாவை உத்தரிக்கும் ஸ்தலத்திலே தின்று விடுதலையாக்கும்படி அவன் அல்லது அவனுடைய உற்றார் பணங்கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். உத்தரிக்கும் ஸ்தலத்தைப்பற்றிய போதனை தேவனுக்கு எவ்வளவு அவநிர்த்திபை விளைக்கத்தக்கது. அது இறிஸ்துவின் பிராயச்சித்தப் பலி பாவ நிவிர்த்திக்குப் போந்ததல்லவென்று மறுக்கின்றது. யேசுக்கிறிஸ்துவின் ரத்தம் எல்லாப் பாவங்களிலும் நின்றும் சுமைச் சுத்திகரிக்கின்றது (க. யோ. க: எ.) என்று தேவன் தமது திருவாக்கிலே சொல்லியிருக்க, ரோமான் சமயமப்படியல்ல, அது போதாது, உத்தரிக்கும் ஸ்தலத்தின் அக்கினியினாலும் சுத்திகரிக்கப்பட வேண்டுமென்கிறது. நீ என்னுடன் இன்றைக்குப் பரதீசிலே இருப்பாய் (லூக்கா உசு: சசு.) என்று மலைப்பக்கத்திலே மரித்த கள்வனுக்குச் இறிஸ்து சொன்னதினால் உத்தரிக்கும் ஸ்தலம் ஒன்றில்லை என்பதையும் அப்படிப்பட்ட ஒரு ஸ்தலம் அவசரமில்லை என்பதையும் வருதறியாக எமக்குக் காண்பிக்கவில்லையா? எனெனில், உத்தரிக்கும் ஸ்தலம் ஆருக்காவது தேவையாயிருக்குமென்றால் அது ஒரு கள்வனுக்கே தேவை.

Christianity is a religion of free grace; but Romanism of works and penances :—இறிஸ்துமார்க்கம் கைமாறற்ற கிருபை பொருந்தியதாயிருக்கிறது. அதின் சலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள், பலன்களெல்லாம் தேவனுடைய இலவசமானதும், கைமாறற்றதும், அளவிறந்ததுமான அன்பினாலும் இரக்கத்தினாலுங் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வெயிலும், மழையும் எவ்வளவு இலவசமாய் எல்லாருக்கும் கிடைக்கின்றனவோ, அவ்வளவு இலவசமாகவே தேவனுக்கிரமும் பாத்திரமற்றவர்களும் ஏகத்துக்கே தவானவர்களுமாகிய பாவிகள் பேரிலே சொரியப்படுகின்றது. 'ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் சலசமீபத்தில் வாருங்கள், பணமில்லாதவர்களே நீங்கள்வந்து வாங்கிப் புசியுங்கள், நீங்கள் வந்து பணமின்றி த்திராட்ச ரசத்தையும் கிரயமின்றிப் பாலையும் கொள்ளுங்கள்." (ஏசாயா, நிந: க.). "வருந்திப் பாரஞ்சுமக்கிற நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவேன்." (மத்தே. ஈக: உஅ.). "ஆவியும் மணவாட்டியும் வாவென்கிறார்கள், கேட்கிறவனும் வாவென்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விரும்புகிற எவனும் சீவ தீரைக் கைமாறின்றிப் பெறக்கடவன்." (வெளிப். உட: கஎ.). ரோமை மதமோ கிரியைகளிலும் புண்ணியங்களிலும் அடக்கிய மதமாயிருக்கின்றது. புண்ணியஞ்செய், அப்போ சீவிப்பாயென்று சொல்லுகின்ற மார்க்கமாயிருக்கின்றது. அது ஒரு வியாபாரப் பற்றுவரவு பண்ணுகின்ற சமயம். அதன் சலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள், பலன்கள் யாவும் கிரயங்கொடுத்துக் கொள்ளுவோராகிய ஐசுவரியவான்களுக்குப் பணத்திற்குத் தக்கதாகவும், பணமில்லாத வறியவர்களுக்கு நெடும் யாத்திரைகள் உபத்திரவமான உபவாசங்கள் பிராயச்சித்த நோன்புகளாதியானவைகளுக்குத் தக்கதாகவும் விற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianity has but one Mediator; but Romanism several:—கிறிஸ்து யேசுவென்னும் ஒருவரையே, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலே யள்ள, ஒரே மத்தியஸ்தராகக் கிறிஸ்துமார்க்கம் கூறுகின்றது. ரோமை மதமோ பரிசுத்தவான்கள், தேவதூதர்கள் முதலான அநேகரையும் விசேஷமாகக் கன்னிமரியாளையும் மத்தியஸ்தர்களாகக் கொண்டு அழைக்கின்றது.

Christianity says, we must worship and serve only the one Living and True God; but Romanism imposes the worship of saints and angels and even their images and relics:—கர்த்தராகிய தேவனைத், தொழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வதாகவென்பதே, கிறிஸ்துமார்க்கப் பிரமாணம் ஆனால் ரோமை மதமோ, தேவனைப்போலவே கிறிஸ்துவினுடனே கூட அரசாளுகின்ற சுத்தவாளரும் கனம்பண்ணப்பட வேண்டுமென்றும், அவர்களுடைய எலும்பு முதலாகிய ஞாபகச் சேடங்களும் நிர்மாணியங்களும் (Relics) சுத்திரமாக எண்ணப்படவேண்டுமென்றும், நாலாம் பயஸ் (Pope Pius, IV.) என்னும் பாப்புவின் மார்க்கப் பிரமாணம் ஏழாம்பிரிவிற் கூறுகின்றது. அதாவது, தேவனைப்போலவே, கன்னி மரியாளுக்கும் சுத்தவாளர்களுக்கும், தேவதூதர்களுக்கும், வணக்கமும் ஆராதனையுஞ் செய்யப்பட வேண்டுமென்றே உறுதியாகக் கற்பிக்கின்றது.

Christianity says, we must not make graven images nor worship them; but Romanism reverses the command and does both :—யாதொரு தொழிற்பதித்தப்பட்ட விக்கிரகங்களே உண்டாக்கி, அவைகளே நமக்கரியாயாகவென்று நிற்சுதசமயம் கூற, ரோமை மதமோ, நிறிஸ்து, சித்தில கன்னிகையாகிய தேவமாதா, மற்றும் பரிசுத்தவான்கள் முதலானவர்களுடைய சரூபங்கள் செய்துவைக்கப்படவேண்டுமென்றும், அவைகளுக்குச் செல்லிய கனமும் வணக்கமும் செலுத்தப்படவேண்டுமென்றும் கற்பிக்கின்றது. மேற் சொல்லப்பட்ட பாப்புவின் பிரமாணம் எட்டாம் பிரிவைக் காண்க.

Christianity says, the Bible contains all things necessary to salvation; but Romanism says, no, tradition is also needed:—எங்கள் ரட்சிப்புக்குத் தேவையான சகலமும் பரிசுத்த வேதாகமத்திலே உண்டென்றும், அதுவே எங்கள் இவனின வழிகாட்டியும் விசுவாசப்பிரமாணமுமாகி, மனிதரைக் கிறிஸ்து யேசுவிலே உண்டாகும் விசுவாசத்தினுல் இரட்சிப்புக்கேற்ற ஞானவான்களாக்கப் போதுமானமாயிருக்கிறதென்றும், கிறிஸ்தசமயஞ் சொல்லுகின்றது. ரோமன் மதமோ, வேதாகமம் மாத்திரம் போதாது, அதோடுகூடக், கன்னபாரம்பரையும் சபையின் வாக்குக் தேவையென்கிறது.

Christianity says, the Bible is for all; but Romanism forbids it to the laity :—வேதவாக்கியங்களே ஆராயுங்களென்று கிறிஸ்து சகலருக்குஞ் சொல்லியிருக்க, ரோமன் மதமோ, தன் சேகரத்தாரை அப்படிச் செய்யப்படாதென்று தடுக்கின்றது. கிறிஸ்தவர்கள் (Protestants) வாசஞ்செய்யுந் தேசங்களிலே மாத்திரஞ், சில பேருக்குச், சில கட்டுப்பாடுகளுடனே அதை வாசிக்கும்படியாக உத்தரவு கொடுத்திருக்கிறது. இம்மதம், தன் சேகரத்தைச் சேர்ந்தவர்கள் கைக்கு அகப்படாமற் தடுக்கும்படி வேதாகமங்களைப் பலமுறைகளிலுஞ் சுட்டெரித்ததுண்டு.

Romanism is not Christianity :—இனி அதிகமாக இல்விரு சமயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு போகவேண்டியதில்லை. ரோமைமார்

ர்க்கம் நிறைந்து சமயமல்ல என்பதையும், ரோமை மதத்தவன் ஒருவன் தன் னைக் நிறைந்தவனென்று அழைப்பது சரியல்லவென்பதையும், வாசிப்பவர்க ளாகிய அறிவாளிகளுக்குப் புலப்படுத்தத்தக்கதாகப், போதியளவு நியாயங்கா ட்டியிருக்கிறோம். ரோமைமதம், அடியூற்றுங்கிய ரோமையிலேயே நிறைந்து சமயத்தில் விசேஷ சத்தியங்களின் மதாரத்தைக் கசக்கப்பண்ணினதும், சர் வக்குரிய தவறிலே தோய்ந்ததுமான ஒரு மதமாயிருக்கின்றது. அது தவ றுதல்களாகிய களைகளை முளைத்தெழும்பச்செய்து, பாப்பாராஜனுஞ் சங்க ங்களிலுஞ்சு வளர்க்கப்பட்டுத், தேவ சத்தியத்தின் வளர்ச்சியை நெருக்கி ப்போட்ட ஒரு மதமேயாம். ரோமையிலே அனுசரிக்கப்படுஞ் சமையம், மரியாளின் சமையமேயல்லாமற் றிறிஸ்துவின் சமையமல்ல. ஆகவே, அதின் அனுசாரிகளாகிய மரியை மதத்தவர்களெனெல்லாம் யேசுவின் பிள்ளைகளல்ல. அதேக ரோமன்சமயக் குருமாரின் பெயர்களுடனே இணைக்கப்படும் O. M. I. (i. e. Oblates of Mary Immaculate) என்னும் மூன்றெழுத்துக்களின் அர்த்தத்தைப் பாருங்கள். அஞ்ஞானிகளால் ஆசரிக்கப்படும் விக்கிரகா ராதனை, இப்பிரபஞ்சமாகிய புத்தகத்தில் மங்கித் தூலங்குன்ற புல்லொளி க்குமாத்திரம் விரோதமான பாவமும், ரோமைமதத்தவர்களால் ஆசரிக்கப்ப டும் விக்கிரகாராதனை, வரையப்பட்ட தேவ வாக்கிய அருணேயத்துக்கு விரோதமான பாவமுமாயிருப்பதினுஞ், அஞ்ஞான விக்கிரகாராதனையிலும் ரோமைமத விக்கிரகாராதனையே, தேவனுக்கு அதிக வெறுப்பைக் கொடுக் கத்தக்கது.

(இன்னும்வரும்.)

T. G.

எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்திற் செய்.—"Do all in the name of the Lord Jesus."—நாம் கையிடும் எக்காரியத்தையும் இயேசுவின் நாமத்தில் முற்றுலிப்பதே நமது பிரதான அபிப்பிராயமாய் இருக்கவேண்டு ம். நன்றியுள்ள நேசத்தோடும் கணிசமான நிதையோடும் எதொன்றையுஞ் செய்வதே, நமது முக்கிய நியமமாய் இருக்கவேண்டும். அவரது பணிவிடை க்காரரைப்போல், அவருக்கு விருப்பமானதை நாடி, அவருக்குக் கீர்த்தியு ண்டாச்சுவதே நமது விசேஷ கோக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொன் றையும், அவரது சித்தத்துக்கும், பிரமாணத்துக்கும் இசைய நிறைவேற்றுவ தே, நமது நித்திய நியமமாய் இருக்கவேண்டும். அவரையே குறைவற்ற மு ன்மாதிரியாய்க்கொண்டு, எவ்விஷயத்திலும், அவரையே பின்பற்றவேண்டு ம். அவரே நமது பெலமும் ஆதரவுமாய் இருப்பதால், அவருடைய கருணே யான உதவியும் ஆசீர்பாதமுஞ் இடைக்குமென்ற நிடசம்பிக்கையுடன், ஒவ்வொன்றையுஞ் செய்யவேண்டும். அவர் நிமித்தமே, அங்கிகரிக்கப்படு மென்ற சம்பிக்கையோடு, யாவையுஞ் செய்யவேண்டும். அவர் மூலமாகவும் அவர்பொருட்டாகவும், நமக்கு அருளப்படுகின்ற ஏராளமான கண்மைகளுக் காகவும் இருபைகளுக்காகவுங், தேவனுக்கு நன்றியறிதலும் பயபத்தியான தொணியும் பூண்டவர்களாய், ஒவ்வொன்றையும் கடப்பிக்கவேண்டும். அ தி தாழ்மையுடன் அவரை வந்தனே வழிபாடுசெய்து, அல்லது, அவர் நாமத்தி ற் தேவனைப் பிரார்த்தித்து, எதையும் ஆரம்பிக்கவேண்டும். நாம் கையிடும் ஒவ்வொன்றிலும், அவருக்கேற்ற மரியாதைசெய்து, அனுதினமும் அவரை மறவாதிருக்கவேண்டும். அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தின்படிக்கு ம், நமது கடமையின்படிக்கும், அவரை எப்பொழுதும் நியாளிக்கவேண்டும்.

Barrow.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SKETCH OF A SERMON.

பரிசுத்த ஆவி ஆள்த்தன்மையுந் தெய்வீகமுமுள்ளவர்.

PERSONALITY AND DEITY OF THE HOLY GHOST.

அப்போஸ்தலர், 5: 3, 4.

இந்த வசனங்களினால்,

I. பரிசுத்த ஆவியானவர், மெய்யான ஆள்த்தன்மை உள்ளவர் என்பதற்கு நியாயங்கள்.

(1) வேதம் பரிசுத்த ஆவியானவரை ஓர் ஆள் என்று கூறுகின்றது. யோவான், 16: 7, 8, 13.

(2) பரிசுத்த ஆவியானவர் மனுஷத்துவங்களுள்ளவர்.

அவர் மனமுள்ளவரென்றும், உரோ. 8: 27.
அறிவுள்ளவரென்றும், 1 கொரி. 2: 11.
சித்தமுள்ளவரென்றும், 1 கொரி. 12: 11.

(3) பரிசுத்த ஆவியானவர் ஆள்த்தன்மைக்குரிய உணர்ச்சிகளுடையவர். எபேசி. 4: 30. ஏசாயா, 63: 10. அப். 15: 28.

(4) பரிசுத்த ஆவியானவர் ஆளுக்குரிய கிரியைகளைச் செய்கிறார் யோவான், 16: 13. அப். 20: 23. உரோ. 8: 16, 26.

(5) பரிசுத்த ஆவியானவர் மனிதரிடத்திற் போதகரை அனுப்பி, அவர்கள் செய்யவேண்டியதைக் கற்பிப்பதினால், ஆளாய் இருக்கிறார். ஏசாயா, 6: 9, 10. அப். 28: 25, 29. 28: 29.

(6) பரிசுத்த ஆவியானவர் ஆளுக்குரிய இலட்சணங்கள் உள்ளவர் ஆதலால், அவர் ஓர் ஆள். அப். 10: 38. உரோ. 15: 13. 18: 10. 1 கொரி. 2: 6.

II. பரிசுத்த ஆவியானவர் மெய்யான தேவன்.

(1) அவர் தேவனென்று அழைக்கப்படுகிறார். 2 தீமோ. 3: 16. 2 பேதுரு, 1: 21. மத்தேயு, 12: 28.

(2) அவர் தேவலட்சணங்கள் உடையவர், ஆதலால், அவர் தேவன். சருவ வியாபகம், சங். 138: 7, 10. சருவ ஞானம், 1 கொரி. 2: 10 நித்தியம், எபி. 9: 14 பரிசுத்தம், சங். 51: 11.

(3) தேவன் செய்யுங் கிரியைகளை அவர் செய்கிறார். யோபு, 26: 13. 33: 4. யோவான், 3: 6. உரோ. 8: 11.

(4) பிதாவின் நாமத்தினாலும் குமாரனின் நாமத்தினாலும், ஸ்நானிக்கப்படுவதும் ஆசீர்வதிக்கப்படுவதும் போல, பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் அப்படியே செய்யப்படவேண்டும். மத்தே. 28: 19. 2 கொரி. 13: 64.

(5) பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் மன்னிக்கப்படுவதில்லையென்று கூறப்பட்டிருப்பதினால், அவர் தேவன் என்பது பிரத்தியட்சம்.

(6) சபையுடன் தலைமுறை தலைமுறையாக இருக்கிறவரும், விசுவாசிகளில் வசிப்பவருந் தேவன். பரிசுத்த ஆவி இப்படி இருக்கிறார். ஆதலால் அவர் தேவன். மத்தே. 28: 20. யோவான், 14: 16, 17. 1 கொரி. 3: 16. 6: 19. 2 கொரி. 6: 16.

W. M.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

LYRIC

பேசுக் கிறிஸ்துவின் திவ்வீய குணம்.

JESUS THE BELOVED.

வெண்பா.

மாணிக்க முத்தை வகையறுப்பீர்; மண்ணிலெடுத்
தாணிப் பொன் னென்றும் அறிவிப்பீர்:—ஞானிகளே!
யேசுக்கிறிஸ்தின் இணையில் குணம் பாரும்,
தேசற்ற ரெட்சகர் தேரும்.

இராகம், கமாசு. ஆதி தாளம்.

பல்லவி.

யேசுக்கிறிஸ்தின் திவ்வீய குணம் பாரும்,
இவரே ரெட்சகர் தேரும்.

அனுபல்லவி.

தேசுயர் நிரித்தவ தேவனின் மகத்துவ, ரீரீரீரீ
திவ்வீய அடிசனிற் தொவ்வீய படிபணிற் - - - தேசுக்கிறிஸ்தின்.

சரணங்கள்

க. உலகினில் இவர் நிகர் ஒருவரும் இலர் கலர்—பாரும், தேரும்,
ஒருமொழுதெனும் பவம் புரிந்திலர் இதனை நன் கோரும்;
மலினென வுளரினர் மனுஷன் மாத்திரம் அலர், ரீரீரீரீ
மரிலாத பரன் மாமிசதமானதிரு - - - யேசுக்கிறிஸ்தின்.

உ. ஒருவரே பரன் இருதயத்தினுல் அவரை நீ பணிவாய், தணிவாய்,
உள்ளத்தினுல் முழுப்பெலனுல் அவர்மேல் அன்பு கனிவாய்;
உன்னைப்போல் உன் பிறனை உரித்தில் நேசிப்பாய் என, ரீரீரீரீ
உறுத்திப் போதித்த உயர் குருவாகிய - - - யேசுக்கிறிஸ்தின்.

ங. குருடர் செவிடர் பல வருடமுடவர் முகர் நாடின தேடின,
குரு அவர் அவர் தொடக் கொடியரோகங்களும் ஓடின;
ஒருமொழி அவர்சொல உயிர்த்தனர் மரித்தவர், ரீரீரீரீ
ஒருங்குடன் உரைசெய உலகினில் இவர் எவர் - யேசுக்கிறிஸ்தின்.

ச. இவர்க் கடர காவிலும் சிலுவைதனிலும் வந்த துயரமும் மரணமும்,
இகத்துப் பாவிகட்காய் எமக்காய் இறங்கின தேவாக்கினை;
இவர் சுத்தர் இவர் சுத்தர் இவர் கர்த்தர் இவர் கர்த்தர், ரீரீரீரீ
நமப்பாவ நரர்க்காகச் சிலுவை தந்தார் - - - யேசுக்கிறிஸ்தின்.

[அந்தனே,

ஞ. கல்லறையினின்று மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்த கர்த்தனே,
கருணையாய்ச் சிருஷ்டிக்குக் காட்சியளித்த பரிசுத்தனே;
வல்லமையினோடு பரமண்டலத்துக்கெழுந்தவர், ரீரீரீரீ
வானினுலகை கியாயந் தீர்க்கவும் வருபவர் - - யேசுக்கிறிஸ்தின்.

ஃ. தம்மிடம் வரும் எவரையும் ஒருக்காலும் தள்ளாத சேயன், சகாயன்,
தஞ்சம் அடைபவருக்குஞ்சல் அபயஞ் சொல்லும் வாயன்;
தம்மிடம் வரும்படி உண்மையும் அழைக்கிறார், ரீரீரீரீ
சாமதஞ் செய்யாதேயும் தருணமிதுவுமிரும் - - - யேசுக்கிறிஸ்தின்.

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri
noham.org | aavaahanam.org

TRUST IN GOD,
OR, THREE DAYS IN THE LIE OF GELLERT.

தேவனே கம்புதல்.

(தொடர்ச்சி)

செல்லட்டுடைய அறையைவிட்டு வைத்தியன் புறப்பட்டுப் போகையில், அவருடைய விசாரிப்புக்காரியைக் கண்டு, துரையுடைய விதருச் குவிய லே எனக்குக் காணபியென்றார். அவள் அவரைக் கூட்டிக்கொண்டு போய் விறகைக் காண்பித்து, பாரும், மெத்தக் கொஞ்சம். அதிகம் வராவிட்டால் நெருப்பு தாக்குபோமென்றாள். வைத்தியன் அதற்கென்ன, பார்ப்போம், அவருடைய அறையிலே இப்பொழுதே நெருப்பு மூட்டென்று சொல்லி, செல்லட் எழுதின சீதத்தைத் தன் மனைவிக்கு வாசித்துக்காட்டும் படி உடனே புறப்பட்டுப்போனார். அவ்வூர் தெருவிலே சேர்ந்த உடனே, அந்த எழை ஸ்திரி அவரைச் சந்தித்து அருமையான ஐயாவே, என் கணவனுடைய பத்திச் செல்லட் உமக்குறவிதத்திருக்கக்கூடும். அவருக்கு மெத்த வருத்தம். நீர் வந்து அவருக்கு வைத்தியஞ் செய்யவேணும். நன் நெஞ்சனும் அவரைப்பற்றிச் சொல்லியிருக்கக்கூடும் என்றாள். வைத்தியன் அந்த ஸ்திரியை நோக்கிச், செல்லட்டை உனக்குத்தெரியும் என்றார். அவளோ அவருடைய சுற்செயலகளை விபரிக்கத் தொடங்கினாள். அவரோ காங்கள் வழிபோகையில் பேசுவோமென்று சொல்லி கடந்து, கடந்து, பேசிக்கொண்டு போனார்கள். ஆயினும், அந்தக் கரிசனையான ஸ்திரித்தை விபரமாய் அறியும்படி, அடிக்கடி தெருவிலே நின்று, ஆ! இப்போ அவருக்கு வறுமை எப்படி வந்ததென்று தெரிகிறது. கோவில் எலிபோல இரையில்லாமல் வறுமைப்பட்டார். அவருடைய அறை நெருப்பில்லாமற் சீதளம் நிறைந்தது. இப்படித்தொத்த நல்லபகாரியைத் தேவன் ஆசீர்வதிப்பாரா கவென்று சொன்னார்.

ஸ்திரி அதைக்கேட்டு, செல்லட் தனக்குச் செய்த நன்மையின் உயர்பு எவ்வளவென்று முன்னேயிலும் மும்மடங்காறிந்தாள். வைத்தியனே ஸ்திரி சொன்ன யாவையும் அதிசயமாய்க்கேட்டுக், கேள், அதிகபணமும், அதிகவிருதும், அவருக்குக் கிடைக்கும். தேவன் அப்படிக்கொத்த மனுஷரைச் கைவிடார். கம்பு என்றார்.

பின்பு அவர் அவளோடேபோய்த், தன்பக்காரனுக்கு வேண்டிய மருந்து கொடுத்து உடனே திரும்பிச், செல்லட் செய்த நன்மைகளையும், அவனுக்கு வரக்கூடிய உபாதிகளையும் சினைத்துக், கவலைப்பட்டுத், தன் வீட்டு வாசல் ருகே போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் நிறந்த சேணப்பூட்டிய குதிரையை ஒருவன் கலினத்திற் பிடித்திருக்கிறதைக் கண்டு, உனக்கென்னவேணுமென்று கேட்டார். அவன் லீபிக் கதரத்துக்குச் சமீபமாயிருக்கிற கதராபதி, தன் மனைவிக்குப் பிரசவிக்கிறகாலஞ் சமீபித்தபடியால், நீர் சீக்கிரமாய் வரவேண்டுமென்று எண்ணை உம்மிடத்தில் அனுப்பினார். ஆ! வைத்தியனே, சீக்கிரமாய் வாரும். அவளுக்கு அதிக வருத்தமென்றான். இதை வைத்தியன் கேட்டுத், துக்கத்திலுலும் அனுதாபத்திலுலும் எவப்பட்டு, என் மனைவி அக்கீதத்தைத் தேட்க வாசிக்கும்படி இடமில்லை. சாமதிக்க நேரமில்லையே என்று சொல்லிச் சீக்கிரமாய் வீட்டுக்குட்போய், வைத்திய

க்கருவிகளே எடுத்துக்கொண்டு திரும்பிவந்து, குதிரைச்சேணத்தின்மேற் பாய்ந்து, வேலைக்காரன் பின்செல்லத் துரிதமாய் ஓடினர்.

புருஷபாதேசத்தில் யுத்தமிருந்தபடியால், வீதிகள் பீரங்கிகளினலும் யுத்தவீரர்களினலும் நிறைந்திருந்தன. ஆகிலும் வைத்தியன் பிரயாசத்தோடே ஊடுசென்று, நகராதிபதியுடைய வீடுபோய்ச் சேர்ந்தார். நகராதிபதி கவலையுள்ள முகத்தோடே வைத்தியனைச் சந்திக்க வெளியே வந்தார். அவரும் மவுத்தியரும் ஒருவரோடொருவர் சிலகாரியங்களே இரகசியமாய்ப் பேசியபின், இருவரும் மேல்வீட்டுக்குப் போனர்கள். ஒருமணித்தியாலஞ் சென்றபின் இறங்கிவந்தார்கள். வைத்தியனுடைய முகஞ் சந்தோஷத்தினல் மலர்ந்தது. நகராதிபதியுடைய முகத்திலிருந்த துக்கம் களிப்பாய் மாறிற்று. அவருடைய போசனசாலையில் அவரோடு அநேக சேனத்தலைவர் பந்தியிருந்தபண்ண உட்கார்ந்தார்கள். தங்களோடு புசிக்கும்படி வைத்தியனையும் உட்காரச்சொன்னர்கள். அவர்கள் அந்தச் சேனபதிகளுக்குள் ஒருவனுக்கு அதிக சங்கடமும், மேன்மையும் கொடுத்தார்கள். மரியாதையினலன்றி வேறெதினலும் வேற்றுமைப்படவில்லை. வைத்தியன் அதிக பசியாயிருந்தபடியால், சேனபதிகள் பேசினகாரியத்தைக் கொஞ்சமும் கவனியாமல், ஆவலாய்ப் புசித்தார். நகராதிபதி அடிக்கடி அவருக்கு முன்பாக கல்லு பதார்த்தங்களே வைப்பார்.

அதிக சங்கடமெற்ற அந்த வீசேஷ சேனபதி வைத்தியனே நோக்கி, நீர் லீப்சிக் நகரத்திலிருந்து வந்தீரென்று விளங்குகிறதென்றார். வைத்திய னே, தான் ஆவலித்த போசனத்தைக் கைவிடாமல், ஆம். ஆம், என்றான். அதற்கு அந்தச் சேனபதி, நீர் அதிக கீர்த்திமானன செல்லட்டை அறிவீரா என்று கேட்டான். அப்போ வைத்தியன் அந்தக் கேள்வியில் லவப்பட்டு, கத்தியையும் முள்ளையும் அப்புறம்வைத்து, ஆம். ஆம், நான் அவருடைய வைத்தியனும் சிநேகிதனுமாய் இருக்கிறேன் என்றார். அச்சேனபதி, ஆமோ? அவனெரு தன்பக்காரனுயிருக்கிறனென்று கேள்விப்பட்டேன் என்றான். வைத்தியன், அது மெய். கல்லியை விருப்புறவர்களுக்கு அப்பியாசமும் வேணும். அதுபோலச் சகமனுடதற்குச் சுதிரையேறிச் சவாரியாய்ப்போவது அவசியமென்று அவருக்குச் சொன்னேனென்றார். சேனபதி அப்படிச் செய்வானே என்றான். மனமுண்டு. வழியோ இல்லேயென்று சொல்லிக், கையை விரித்தார். சேனபதி, அத்தனை வறுமைப்பட்டாரோ? என்றான். வைத்தியன், ஆம், அப்படித்தான் சொல்லுவேன் என்றார். சேனபதி அதி பிரியக் காண்பித்தபடியால், வைத்தியன், சங்கதிகளை எல்லாங் கிரமங் கிரமமாய்ச் சொன்னர். சேனபதி, ஆ! இத்தனை நல்லபகாரி வறுமைப்பட்டுத், தன்னிடமிருந்த யாவையுங் கொடுத்தும், தன் சுகத்துக்கலசரமான குதிரையைக் கொள்ளாளனு? என்றார்.

வைத்தியனே, தன் பையிலிருந்த கடதாசியை எடுத்து நீட்டி, விடியற்காலத்திலே அவரெழுகின நேரத்தை வாசிக்கப் பிரியப்படுவீராக்குமென்று சொல்லி, அப்பிரதானிக்குக் கொடுத்து, இதுவே கடதாசியோடு; இன்று விடியற்காலமே என் மனைவிக்கு வாசிக்கவேணுமென்று கேட்டு வாங்கிக்கொண்டு போனேன். இங்நேரம் வரைக்கும் என் வேலை அதிகப்பட்டபடியால் அவருக்கு வாசித்துக்காட்டச் சமயங் கிடைக்கவில்லை என்றார்.

பிரதானி கடதாசியை வாங்கி, திறந்து பார்ப்பதற்கு நேரமோ? காங்கலெல்லாரு

Digitized by Noolaham Foundation.

ம் என்றுய் மெய்ச்சிக்கொள்ளுகிற தேம் பொதுஅல்லவோ? என்று சொல்லி எல்லாருங் கேட்க வாசித்தான்.

க. ஆரோக்கியம் பூர்த்திபெற்று,
சீவகளி, செல்வம், வெற்றி,
பூர்த்தி, யாவையும் பெற்றேன்.
தொல்லை என்னைச் சூழவந்தும்,
தாழ்மை என்னை ஆற்றித் தேற்றும்,
தேவலுக்குத் துணிப்பேன்.

உ. நானே வெகு நிமைசெய்து,
அதின் ஆழம், உயரம், எது?
தொகை எது? அறியேன்.
தண்டனை எனக்குத் தகும்,
ஆயினும் எனக்கிரங்கும்,
தாழ்மையோடே கெஞ்சுகிறேன்.

ங. கண்ணீரோடே வேண்டல் செய்து,
அருளாற்றில் ஸ்நானம் பெற்று,
தேவ பெலன் அடைவேன்.
தொல்லை, துன்பம், சூழவந்தும்,
பயமின்றி மீட்டி வரும்,
திடனடைந்து களிப்பேன்.

ச. தொல்லைப் பாரம் என்று சொல்லி,
நெஞ்சமே! கர்த்தாவைத் துதி.
வேண், மூத்தி, அவரே.
துன்பம் வந்தும், லோகம் விட்டும்,
எனக்கென்று மோட்சம் நிற்கும்,
குறைவின்றி, ஆளிப்பேன்.

இக்கீதத்தைக் கேட்டவர்களெல்லாரும் வெகுநேரமாக அமைச்சலாயிருந்தார்கள். அது ஒவ்வொருவன் நெஞ்சிலேயும் வெகு ஆழமாய்த் தாக்கிற்று. நகராதிபதியோ, தேவன் தனக்குக்கொடுத்த ஈவின் நிமித்தமும் இக்கீதத்தின் நிமித்தமும் அழுதார். பிரதானி, வைத்தியனை நோக்கி, நீர் சற்றே பொறுமையாய் இக்கீதத்தின் ஓர் பிரதியை எழுதிக்கொள்ள உச்சரவு கொடுப்பீரா என்றான். வைத்தியன், தடையில்லை என்றார். பிரதானி, அதைப் பிரசித்தலெவனிடம் கொடுத்துச், சீக்கிரமாய் ஓர் பிரதி எழுதித் தாவென்று சொல்லி, எழுதுவித்துக் கொண்டுபோனான். நகராதிபதி இந்தச் சங்கீதத்தையும் மற்றும் அநேகம் பத்தியுள்ள கீதங்களையும் எழுதினவன் அன்பமாய் இருக்கிறானென்றும், இந்தக் கீதனகாலத்தில் நெருபமூட்டவழியில்லையென்றும் சொல்லுகிறீரோ? என்றார். வைத்தியன், நான்சொன்னது சத்தியம். இப்படியே இந்த விடியற்காலையில் இருக்கக் கண்டேன் என்றார். நகராதிபதி, ஆமோ? இப்படியிருப்பதைப் பார்க்கிலும், மெலிந்த கீதனத்தினுலே கொடுகொடுத்துவருந்துகின்ற காயைப்போலிருப்பது கலமென்று சொல்ல, செல்லட் எழுதின் கீதம் வாசிக்கக் கேட்ட எல்லார் மன

திலும் ஆழமான உணர்ச்சி உண்டான போதைக்கும், நகராதிபதி பகிடியாய்ப் பேசினதொன்று சந்தேகங் காட்டினபடியால், சிரித்தார்கள். அவரோ, மெய்தான், தேவன் எனக்கு அதிக நன்மைசெய்தபடியான், லீப்சிக் நகரவீதிகளிலே ஒருக்காலுங் கண்டறியாத ஒரு வீறாகு சமை இரண்டு குதிரை இழுத்துக்கொண்டு போகவேணுமென்றதொ ", சாளரவாயில்வழியாய் வேகாரனைக் கூப்பிட்டு, நீ பெரிய வண்டிலைக் கொண்டுவந்து அது கொள்ளக்கூடிய வீறகை ஏற்றி, சாலு குதிரைகளையும் பூட்டி, லீப்சிக் நகரத்துக்குக் கொண்டுபோய், செல்லட் பண்டிதனுடைய வீட்டைத்தேடி, அதன் கதவுக்முன் கொட்டி "ஆசீர்வாதம் பூர்த்தியெற்று" என்ற தேதினிமித்தம் உபகாரமென்று சொல்லிவா சிக்கிரம்பண்ணு. இச்சணமே இது அவனுக்கு வேணுமென்குர். வேலைகாரன், செய்வேன் ஐயா, என்றுசொல்லிப் போய்விட்டான். நகராதிபதியே, கெட்டி, கெட்டி என்று சேளுபதிக கெல்லாரும் ஏகமாய்ச் சொன்னார்கள். பிரதானியோ நீர் நல்ல நிதானி, நான் நினைத்துப் பின்பற்றவேண்டிய முன்மாதிரியை எனக்குக் காண்பித்தீர் என்குர்.

பின்னும் செல்லட்டைப்பற்றி அனேகங்காரியங்களை எடுத்துப்பேசி, வைத்தியரிடத்திலே அவருடைய நடை, குணம், சேவனம், வியாதி முதலானவைகளைப்பற்றி வெகு கேள்விகளைக் கேட்டபின்பு, அவர் செல்லட்டை அதிகமாய் சேஷித்தபடியால் சந்தோஷமாய் மறு மொழி சொன்னார். பின்பு நீதப்பிரதியைக் கொண்டுவந்து, பீரங்கித் தலைவரே பிரதானிச்சுக் கொடுத்தான். பிரதானி அதை வாங்கி வைத்தியனுக்குக் கொடுத்து, உபகாரஞ் சொன்னான். நகராதிபதி, நானும் ஓர் பிரதியை ஜெர்மன்படி தயவுசெய்து தாருமென்குர். வைத்தியன், மல்லது, நான் போகுமுன் மறுபடியுங் தருகிறேன் என்றுக்கொள்ளுமென்குர். நகராதிபதி, ஆம், தருவேன். ஆனாலும், எங்கள் பாடகன் கனமுர் எழுதுவான், அவனிடத்தில் அனுப்புவேனென்குர். வைத்தியன் இருந்தசாளுக்கு வந்தனஞ்சொல்லிப் புறப்பட்டுக், குதிரைசையப் பிடித்துக்கொண்டு நின்ற குதிரைக்காரன் சமீபமாய் நிற்கிறதைக்கண்டு, எல்லாருஞ் சங்கடபண்ணின அந்தப் பிரதானி யார்? என்று கேட்டான். குதிரைக்காரன் அவர் புருஷியாத்தேசத்தின் அதிபதி என்குர். வைத்தியன் அதைக்கேட்டு நெற்றியிலே தட்டிக்கொண்டு படிவழியாய் மேல்வீட்டுக்கு எறினான்.

கொஞ்சநேரத்துக்குப்பின் அதிபதியும் அவனுடைய மெய்க்காவலரும் குதிரையேறி, லீப்சிக் நகரத்துக்குப் போகிறவழியிலே ஓட்டமாய் ஓடினசத்தங் கேட்டதும், நகராதிபதி வைத்தியனைச் சாளரவாசலுக்குச் சமீபமாய்க் கொண்டுபோய், சாலுகுதிரைகள் பூட்டப்பட்ட வீறகு நிறைந்த வண்டிலைக் காண்பித்து, என் வாக்கை நிறைவேற்றினதேனென்று பாருமென்குர். வைத்தியன், கெட்டி, கெட்டி, செல்லட்டுக்கும் இது ஆச்சரியமாயிருக்கும். தேவன் உமக்குப் பதில் அழிப்பாராக என்குர்.

வைத்தியனோ, தான் வைத்தியஞ்செய்யும்படி போயிருந்த ஸ்திரியுங் குழந்தையும் சுகப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டு, தன் வீட்டுக்குத் திரும்பவேண்டுமென யோசித்தார். லீப்சிக் நகரத்தில் பட்டாளத்தார்வந்து பாளயமிறங்கவும் கூடுமெனப் பயந்து, மூன்சொல்லிய நிதத்தின் தாயிட்டை வாங்கிக்கொண்டு அங்கு நகரத்தைவிட்டுப் புறப்பட்டு, வீடு போய்ச் சேர்ந்து, தன் மனைவிக்கு அச்சேதனை சாரிக்கச் கொடுத்தபின், புருஷி

Digitized by Siva Siva Vakkiyam Foundation, Chennai and eGangotri

யா தேசத்தின் அதிபதியாகிய கென்றியோடே போசன பந்தியில் உட்கார்ந்தார். செல்லட்டோ, வைத்தியனுடைய சொற்படி, தன் படுக்கையை விட்டுச் சுகத்துக்காக உலாவி வருகையில், தான் முன்னெருமுறை அந்த ஏழை ஸ்திரியைச் சந்தித்த இடத்துக்கு நேரே போனார்.

இதற்குமுன் போன காலியே அவ்விடத்தில் நடந்த சங்கதிகளெல்லாம் அவர் மனதிலே வந்தன. தான் கொடுத்துவிட்ட மூப்பது இறைசாலின் நிமித்தம் அவருக்கு ஒரு தக்கமுமில்லே. ஒரு பிசகைக்காரனுக்குக் கொடுக்க அவர் கையிலே ஒரு சல்லியுமில்லே. அதினாலாய் நடத்தபடியால், வீடு போய்ச் சேரமுன் பொழுதுபட்டது. அவர் தன் வீட்டுக்கு வந்தபொழுது வெகு விறகு கட்டைகள் இருக்கவும், மூன்றுபேர் அவைகளே விறகாக்கிக்கொண்டிருக்கவும் கண்டபொழுது, தனக்குள்ளே நினைத்து, அந்த விறகு தன்னுடையதென்றும் தனக்கு அதிக சந்தோஷமென்றும். அவர்கள் அவருக்குச் சமீபமாயன வந்தனஞ்சொல்லி, ஆண்டவருக்கு ஸ்தோத்திரமாகச் சுற்றிக்கொண்டு அனுப்பினர். நாளைக்கு விறகாக்கி முடியாது, மெத்த வயிர மென்றார்கள். செல்லட் மிகுதியும் அதிசயப்பட்டு, இந்த விறகு வாங்கின வன் நானே? நீங்கள் சொன்னது சரியல்லவென்று சொல்லி, வீட்டுக்குட் போனர். அவர்களோ, ஒருவரை ஒருவர் நோக்கிச் சிரித்து, எங்கள் புத்தகங்களிலொருவன் அங்கே போயிருந்தான். யூதிகளுடைய தலே தோழின்மேற் பெலனும் பூட்டப்படாதிருந்தால், அதை எங்கேயோ விலாவினென்ற ஒருவன் சொன்னன். வேறொருவன், நீ பேசாதே, அந்த மனுஷன் நிமித்தம் லீப்ரிக் நகரத்தார் மேன்மை பாராட்டுவது தகும். அவர் தெய்வ பக்திக்கேற்ற அதே கங் தோங்களே எழுதுகிறரென்றான். இப்படியே அவர்கள் பேசுகையில், செல்லட் தன் வீட்டு விசாரணைக்காரியைச் சந்தித்தார். அவள் புன்னகையோடே, சைமன்னே, வந்தனமென்றாள். செல்லட் ஆச்சரியப்பட்டு, இதெனவென்றார். வீட்டு விசாரிப்புக்காரி, கல்லது, நீர் வெளியே போனபின், விறகு மரம் ஏற்றிய ஓர் வண்டில் கதவுக்கு முன் வந்து நின்றது. அது ஆருக்கென்று வண்டிற்காரனிடம் கேட்டேன். அவன் நான் நகரற்பதியுடைய வேலைக்காரனுப் இருக்கிறேன். செல்லட் பண்டிதனுக்கென்று இந்த விறகுக் குற்றிகளைக் கொண்டு வந்தேன் அவர் இங்கே இல்லையா? என்றான். நான், அவனுடனே, அவர் இங்கே இல்லை. அவர் சவரிபன்னிப் போயிருக்கிறார் என்றேன். அவன், அதற்கென்ன? நான் மரங்களை இறக்கிவைத்த விடுகிறேன் என்றான். அப்படியே அவன் இறக்கிவைத்த மரக்குற்றிகள் அதிகமானபடியால், விறகு பிளக்கிறவர்களை அழைத்துப், பிளக்கச் சொன்னேன். அவர்கள் வெகுநேரமாய் வேலைசெய்தும் முடியாதபடியால், அது தெருவில் இருக்கப்படாது உன்னை எடுப்பிப்போமென்க —அவர், பொறு, அந்த மரங்களுக்கு என்ன விலையென்றார். வீட்டு விசாரணைக்காரி, விலையோ இல்லை; அது ஒரு நற்கொடை என்றாள். செல்லட் இது என்ன கருத்தென்று வரவர அதிசயப்பட்டார். வீட்டுக்காரி, மெய்தான், நற்கொடை என்று சொல்லி, வண்டிற்காரன் தனக்குச் சொன்ன யாவையும் நிரம்ப நிரம்பாய்ச் சொன்னள். செல்லட் அதிகமதிகமாய் அதிசயப்பட்டு, "ஆசீர்வாதம் பூர்த்தியேற்று" என்று சொன்ன தேத்தினிமித்தம் கொடுத்தேனென்று வண்டிற்காரன் சொன்னானென்றார். வேலைக்காரி, ஆம், இதச் சொற்படியே பேசினன், அது ஒரு புதுக் தேமாகும் என்றாள். செல்லட் சந்தேகப்பட்டு, இந்தக் காரியங்களுக்குத் தொடர்ச்சி காணுதபடியால்

தலையை அசைத்தான். அந்தக் கீதம் நகராதிபதியிடத்தில் இத்தனை சீக்கிரமாய்ப் போனதேதென்று நினைக்கக் கூடாது. ஆனாலும், சங்கதிகள் சத்தியம். விறகு மரங்களுக்கு விலையில்லை. மாரிகாலம் முற்றும் நமக்கு உதவும். கல்ல விறகு. இவைகளெல்லாம் அதிசயமென்றுன். செல்லட் தன் கல்வி அறைக்குப்போய் நல்ல நெருப்பு இருந்ததைக் கண்டு, தன் அங்கியைக் கழற்றி, போர்வையைப் போர்த்துக்கொண்டு, தன் பிதா வெருளாளர் உட்கார்ந்த பழைய நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். செல்லட் காலமே இருந்ததைப் பார்க்க இப்போ அதிக சந்தோஷங்கொண்டு, ஆபத்துக் காலத்தில் தேவன் இந்த நயங்களை அனுப்பினாரேயென்று நிதானித்து, மனதில் அவரைத் துதித்து, வேலைக்காரன் தனக்குக் கொண்டுவந்த மிளகுரசத்தைக் குடித்து, பின்னும் கொஞ்ச நேரமாய்க் கல்விபடித்து, யுத்தபட்டாளம் விறிகளை விட்டுப் போனபின் நகராதிபதியிடத்திற் போய், இந்த அதிசயமான காரியங்களின் விபரத்தைக் கேட்பேனென்றெண்ணிப், படுக்கைக்குப் போனுர். வைத்தியனேயாவது, நகராதிபதியையாவது, பட்டாளக்காரையாவது, அதிகமாய் நினையாமல் நித்திரை தூங்கியிருக்கையில் இந்த அதிசயங்களை நினைத்துத் தலையை அசைத்தான்.

இன்னும் வரும்.



HINDUISM DELINEATED AND REFUTED.

இந்து சமய ஆராய்ச்சி.

(தொடர்பு.)

3. In the description of the Universe.

கூவது. அண்ட பிண்ட விவரம்.

இந்து சமயிகளே. வானசாஸ்திரம் முதலிய எச்சாஸ்திரமும், மனுஷனுடைய யுத்தி யூகத்தினுலல்ல, தேவராலும் அவர் அருள்பெற்ரோராகிய ரிஷீச்சுரரானாலும் உபதேசிக்கப்பட்டதென்று உங்கள் நூல்கள் சொல்ல, அதை நம்பி, அக்கொள்கைகளைத் தலைமுறை தலைமுறையாகச் சாதனை பண்ணி வருகிற நீங்கள், பின்வரும் நியாய விசேஷங்களைக்கொண்டு, அந்நூல் கள் தேவனுல் வந்ததனவோ அல்லவோவென்பதைத் தீர்மானித்துக்கொள்ளும்படி, அந்நூற் கொள்கைகளிற் சிலவற்றைக் காட்டுகிறேரும். பட்ச பாதமின்றி அவற்றைச் சிந்திப்பீர்களாக. ஆயிரந் தலைகளையுள்ள ஆதிசேடன் எல்லா உலகங்களையும் தன் தலையின்மேலே வைத்துத் தாங்கியிருக்கிறுனென்றும், இப்பூமி ஏழு தீவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், அத்தீவுகள், உப்பு, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், நல்லநீர் அிய சத்தசமுத்திரங்களாற் சூழப்பட்டிருக்கிறதென்றும், இவற்றிற்கப்பால் சக்கரவாளகிரி இருக்கிறதென்றும், இப்பூமி மத்தியிலே மகாமேரு நிற்கிறதென்றும் அதன் உயரம் 117,000 காதமென்றும், அதற்குத் தென்புறமாக ஓர் நாவல்மரம் நிற்கிறதென்றும், அதன் கனியின் ரசம் ஓர் சிவந்த நதியாக மலையடிவாரத்தைச்சுற்றி வடபக்கமாய்ப் பாய்கிறதென்றும், அந்த ஆற்றின் சலத்தைச் சாப்பிடுகிறவர்கள் உடம்பெல்லாம் பொன்மயமாகி, 13,000 வருஷக்காலஞ் சீவிப்பார்களென்றும், கந்தப்புராணம் அண்டகோசப் படலத்திற் சொல்லி

யிருக்கின்றது. இதுமாத்திரமல்ல, அயிரகோடி அண்டங்களையும், சூரிய சந்திர நட்சத்திரங்களையும், அச் சந்திரனுடைய வளர்வு தேய்வுகளையும், அவற்றின் காரணங்களையும், இராகு கேது முதலிய நவக்கிரகங்களையும், கிரக ண பரிச மோசனங்களையும், துருவ சக்கரத்தையும், காலயுகங்களின் தொகைகளையும் குறித்து, இன்னும் இவைபோலும் சருவ தப்பறையான புரளிகள் அனந்தம், ஐந்தாம் வேதமாகிய இதிகாச புராணங்களிலும், மற்றும் உங்கள் சமய நூல்களிலுஞ் சொல்லியிருக்கின்றது.

உங்கள் நூல்கள் தேகக் கூறுகளைப்பற்றிப் பிதற்றுகையில், மூலவிருத்தத்திலிருந்து எழுபத்தீராயிரம் நாடிகள் பின்னலாயெழும்பிச் சருவாங்கமுஞ் செவ்வுறுகின்றனவென்றும், தேகத்திலே நாலாயிரத்து ஞானூற்று நாற்பத்தெட்டு எலும்புகளுண்டென்றும், எலும்புக்கொன்றுக அத்தனைகையான வியாதிகள் இருக்கிறதென்றும், மூன்றரைக்கோடி உரோமங்கள் உள்ளனவென்றும், இத்தேகம் முந்நாறாள், பத்தமாசம் கருப்பாசயத்தில் தங்குமென்றும், வேறும் வெளியான ஆகாயத்தையும் மூலபதார்த்தமாயிராமல் கலப்புள்ளதாயிருக்கிற பிருதுவி, அப்பு, தேயு, வாயுவாகிய ஐந்தையும், பூதியங்களென்றும் ; வேரொரு தூலிலே, தேகமே தொண்ணூற்றாறு அங்குலம், அல்லது எண்சாணுயரமும், நாலுசாண் பருமமுள்ளதென்றும், அதில் மூன்றரைக்கோடி உரோமம், 80,000 நாடிநரம்பு, 32 முழக்குடல், 92 சன்னி, 9 பேரெலும்பு, 8 பலம் ஈரல், 1 நாழி இரத்தம், 320 பலம் மாம்சம், உனக்குப் பித்தம், ஆழாக்குச் சிலேட்டுமம் இருக்கிறதென்றும், அதற்கத் 96 தத்துவமுண்டென்றும், இப்படியே இயற்கைக்கும் பரீட்சானுபவத்திற்கும் மாறுய், உங்கள் நூல்கள் பேசுகின்றன.

இற்சமயங்களே, உங்கள் நூல்கள் சுத்தித்துவமுள்ள மனுஷனுடைய உத்தேச பரீட்சைக்கு ஒவ்வாத சாத்திரவிதிகளைக் கூறுமாயின், அவைகளே யா சருவஞானராகிய தேவனருளிய மெய்நூல்களென்று சாதிக்கலாம்? இப்பூமியைச் சருவவல்ல கரத்தில் நம்பிவிடுவெனினும், சலத்தில் வசிக்கும் கூர்மத்தின் முதுகில் மண்டலமிட்டுக்கிடக்கும் சர்ப்பத்தின் தலையிலே சுமத்திவிடுதல் புத்தியென்று உங்கள் வித்துவான்கள் நினைத்தார்கள். அப்படியானுல், அக்கூர்மம் ஆதாரத்திலோ, சூனியத்திலோ, எதிற் தங்குகிறது? சத்தசமுத்திரங்களும், மகாமேருவுஞ், சஞ்சீவிமூலியான நாவலும், அதன் கனியுமிழ்ந்த செங்கநியுமெங்கே? ஒற்றைச் செல்லையுடைய இரதத்தையும், அதிம் பூட்டிய ஏழுகுதிரைகளையும், சாரதியாகிய அருணனையும் சூரியன் யாருக்குப் பறிகொடுத்தான்? சந்திரனுடைய இருபத்தேழு மனைவியாரையும் அவர் நிமித்தம் லபித்த அமர பூரண நிலைமையையும் குறித்து அசத்தியம் பேசுகிற புராண போதனையில் மயங்குகிறீரா? இல்லாத பாற்கடலில், பிறவாத அமிர்தகாரணத்தால் கற்பித்திக்கொண்ட செம்பாம்பாகிய இராகு கேதுவைக் குறித்து இன்னும் சந்தேகமுண்டா? பரீட்சிக்கப்பட்ட ஜரோப்பிய பூகோள ககோள சாஸ்திரங்களுக்கு மூன்று இவையும், இவைபோலும் மற்றும் அனந்தம் போலியான சாஸ்திரக் கற்பனைகளும், மலடிக்கு மகன், ஆகாயத்திலே தாமரை, மூயலுக்குக்கொம்பு என்றற் போலாயினவே.

தரிசனப்பொருளாகிய நமது தேகத்தைக் குறித்துப் பேசப்படும் உடலறிவிளக்கமானது, ஆசுரவைத்தியத்தைக் கற்றுச், சத்திரபரீட்சையில் வல்லவராகிய ஜரோப்பிய வைத்தியரால் அழிந்தது கண்டீரே. உத்தேச பரீட்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினுல் அளவிடற்கு விடயமாயுள்ள இவைகளைப்பற்றி, யாது நிமித்தமோ, வெறும்புரளிகளோ உங்கள் நூலாசிரியர் எழுதிக் கட்டிவைப்பாராஞல், பரிசுத்த, தரிசுத்தருரிக்க, மோக்கக் கடாத அருபமான ஆத்துமாவின் உற்பத்தி, தன்மை, ஸ்திதி, இயல்புகளைப் பற்றி என்னதான் சொல்லாது விடுவார். மோம் போகாதிருங்கள்!

4 th. In the Origin of the Hindu gods.

சுவது. தேவ உற்பத்தி.

மெய்க் கடவுளையும் அவரது சித்தத்தையும் வெளிப்படுத்துவதே அக்கடவுள் அருளிய நூலின் தாற்பரியமாய் இருக்கின்றது. மெய்த் தேவரென்று உங்கள் வேதாகிமங் கூறுகிறவரும், நீங்கள் வழிபடுகிறவருமாகிய தேவர்களானது, அத்தேவர்களில் ஒருவராவது, மெய்க்கடவுளாவாரேயென்பதை அவர் உற்பத்தியைக் குறித்துச் சொல்லப்படும் விசேஷங்களினுல் நிதானித்துப், பொருளையும், அதைக்கொண்டு தூலையும் இப்படிப்பட்டதென்று அனுமானித்துக் கொள்ளுங்கள்.

ஆதிசத்தியின் வயிற்றிலே, பிரமர், விட்ணு, உருத்திரன் மூவரும் பிறந்து, ருெட்டி, திதி, சங்காரமாகிய முத்தொழிலையும் அவளிடங் கற்றுக்கொண்ட பின்பு, அவளது கனிஷ்டபுத்திரனுகிய உருத்திரனுக்கே பாரியாய் இருந்தாளென்றும் ஒரு நூலிலும்; வேருெரு நூலிலே, ஆதி சத்தியிலிருந்து ஒரு பீசம் பிறக்க, அதன் வல்லமையாலே சிவன் பிறந்தாரென்றும், சிவனிடத்திலே விட்ணு பிறந்தாரென்றும்; மார்க்கண்ட புராணத்திலே, மகாலட்சுமியிலிருந்து பிரமாவும், மகாகாளியிலிருந்து சிவனும், மகா சரஸ்வதியிலிருந்து விட்ணுவும் தோன்றினர்களென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

அதர்வண வேதத்திலே, பரப்பிரமத்தின் திருநாபியிலே பிரமாவும்; அவரிடத்திலே அரிய உருத்திர மூர்த்தியாகிய சிவனும் பிறந்தாரென்றும், ஒரு இடத்தில் பரமாகிய பராபர வஸ்து மூன்று அண்டங்களே உண்டாக்கினுரென்றும், அவற்றுள் ஒரு அண்டத்திலே பிரமாவும் இலட்சுமியும், ஒரு அண்டத்திலே விட்ணுவும் பார்வதியும், மற்றதில் சிவனும் சரஸ்வதியும் பிறந்தார்களென்றும்; வேருெரு நூலிலே சப்தத்தில் ஆகாயம் தோன்றிற்று, அதுவே சதாசிவம், அவரிலே வாய்வு பிறந்தது, அதுவே மயேசுரன், அவரிலே அக்கினி பிறந்தது, அதுவே உருத்திரன், அவரிலே சலம் பிறந்தது அதுவே விட்ணு, அவரிலே பூமி பிறந்தது, அதுவே பிரமாவென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

இலிங்கபுராணத்திலே, இவ்வுலக அண்டத்திலிருந்து சிவனுனவர் ரூபிகரித்து தனது இடதுபக்கத்திலிருந்து விட்ணு இலட்சுமி என்பவர்களையும், வலதுபக்கத்திலிருந்து பிரமா சரஸ்வதி என்பவர்களையும் உண்டாக்கினுரென்றும்; இருசமய விளக்கிலே சிவ உபாசனைப் படலத்தில், விஷ்ணுவும் பிரமனும் சிவனுடைய சரீரத்திலிருந்து பிறந்தார்களென்றுஞ் சொல்லி இருக்கின்றது.

ஒரு நூலிலே, ஓர் கற்பாந்தத்திலே விஷ்ணு மாத்திரம் மீர்தவராயிருந்து, தன் நாபிக் கமலத்திலே பிரமனைப் பிறப்பித்தாரென்றும், அவர் சிவனைப் பிறப்பித்தாரென்றும்; மேற்படி இருசமய விளக்கத்தில், விஷ்ணு தன் பாதிச் சரீரத்தில் சிவனையும் மற்றப் பாதியில் தேவர், முனிவர், யாவரையும் உண்

டாக்கினரென்றும் ; காரத புராணத்தில், நாராயணனுடைய வலதுபக்கத்திலிருந்து விஷ்ணுவும், கபிலரிலிருந்து வெனும் தோன்றினரென்றும், சொல்லியிருக்கின்றது.

மச்ச புராணத்திலே, பிரமாவிலிருந்து வென் தோன்றினரென்றும், மேற்படி லிங்க புராணத்தில், ஓரிடத்திலே, பிரமாவுடைய கண்ணீரிலிருந்து, உருத்திரன் எனறழைக்கப்படுகிற வென் தோன்றினர் என்றும் சொல்லியிருக்கின்றது.

மேற்படி மச்சபுராணத்திலே, மூக்குணத்திலே இருந்து மும்மூர்த்திகளும் தோன்றினர்களென்றும்; வராக புராணத்திலே. திரிமூர்த்திகளிலிருந்து ஒரு சத்தி தோன்றி, அது மூன்று பருதிகளாகப் பகுக்கப்பட அப்பருதிகளிலிருந்து இலட்சுமி, சரசுவதி, காளி என்பவர்கள் உற்பத்தியானார்கள் என்றும் சொல்லியிருக்கின்றது. (இன்னும் வரும்.)

E. H.

EDUCATION.

கல்விப் பயிற்சி.

(தொடர்பு.)

உபாத்திமாரே, நீங்கள் உங்கள் மாணாக்கரை நேசிக்கவேண்டுமென்பதைக்குறித்து, மூன்றின சஞ்சிகையிற் சொல்லியிருப்பது உங்களுக்கு ஞாபகமாயிருக்கும். அத்துடனே உங்கள் மாணாக்கரில் நீங்கள் கவலையும் அனுதாபமுமுள்ளவர்களாயிருப்பது தகுதியும் அவசியமுமாயிருக்கிறது. பின்வருஞ் சரித்திரம் இதற்கு நல்ல திருஷ்டாந்தம்.

ஒருஸ்திரி ஒய்வுநாட்பள்ளிக்கூடத்தில் உவாத்தியாயியாயிருந்தாள். ஒரு ஒய்வுநாட்காலையிற், சுகதையான அழுக்குவஸ்திரந் தரித்துக்கொண்டு, ஒரு பையன் இவளுக்குக் கிட்டவந்து உட்காந்திருந்தான். அப்பொழுது அவள் அவனுக்கு ஒரு புஸ்தகங்கொடுத்துப் படிக்கும்படி சொன்னாள். சற்றுநேரத்தின்பின், அவள் கவனித்துப்பார்த்தபொழுது, அப்பையன் படிக்கிறதற்கு வருத்தப்படுகிறதுபோற் கண்டு, என்ன, போவான், உன்னுடைய பாடம் கடுமையாயிருக்கிறதோ என்று பட்சமாய் விசாரித்தாள். அப்பொழுது அவன் அவளைச் சற்றுநேரங் குறிப்பாய்ப்பார்த்துத், திரும்பத் தலைகுனிந்து, தன் புத்தகத்தைத் திறக்கிறதும் மூடுகிறதுமாயிருந்தான். ஆனாலும், அவன் படிக்கவேயில்லை. சிலநாட்களின்பின் இந்தத் தரைதாணி அவனைத் தேடி, அவனுடைய வீட்டுக்குப் போன இடத்தில், அவ்வீடு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு, அவன் எங்கேயென்று அதேதவீட்டுக்காரரிடத்தில் விசாரணைசெய்தபொழுது, அவனும் வீட்டாரும் புறகாட்டுக்குப் போய்விட்டார்களென்று சொல்லக்கேட்டு, தான் அவனைக் காண இடங்கிடைக்கவில்லையேயென்று துக்கப்பட்டும், தான் அவனுக்குச் சொன்ன வாக்குகள் ஏதாவது ஒரு நன்மையைச் செய்யக்கூடியதாயிருக்குமென்று நம்பிக்கொண்டு திரும்பிவிட்டாள்.

ஏறக்குறைய இருபது வருஷஞ் சென்றபின், பாலியருக்காக வைக்கப்பட்ட ஒரு பெரிய கூட்டத்தில், அநேகர் பேசிமுடிந்தபின்மேல், நல்ல உடையுந், தோற்றமுமுள்ள ஒரு மனுஷன் எழுந்து நின்று, தான் சிலவார்த்தைக

Digitized by Siva Siva Foundation, chennai.
noolaham.org | aavanaham.org

ல் பேசும்படியாக உத்தரவுபெற்றுக்கொண்டு, தன் சரித்திரத்தைச் சொல்லத் துவங்கினான். "தான் பாலியப்பிராயத்தில் இன்ன இடத்தில் வாசமாயிருந்த தென்றும், அதின் நிற்பர்களுடன் இன்னின்னபடியிருந்தனவென்றும், சொல் லியதின்மேல், தான் ஒரு ஞாயிறுநாட்பள்ளிக்கூடத்துக்குப் போனபொழுது, அங்கே தனக்குக் கொடுக்கப்பட்ட பாடத்தைப் படிக்கத் தான் பஞ்சப்பட் டதை அப்பள்ளிக்கூட உபாத்தியாயி கண்டு, "என்ன? யோவான், உன்னு டைய பாடங் கடுமையாயிருக்கிறதோ" என்று பட்சத்தோடு கேட்டானென் றும், அவள் சொன்ன இந்தச் சொற்கள், அன்றுதொட்டு இன்றுவரைக்கு ம் தன் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றனவென்றுஞ் சொன்னார். இது மாத்திரமல்லத்தன்பேரிலுங் கவலைப்படுகிறவர்களுண்டென்றும், அன்றைக்கே தனக்குத் தெரியவந்ததென்றும், அவ்வுபாத்தியாயி சொன்ன பட்சமான வா க்குகள் தமது மனதிலே அதிக உணர்ச்சியை உண்டாக்கினதினால், அக்காரத் தில் அவளுக்கு மறுமொழிசொல்லவாவது, தனக்குக் கொடுக்கப்பட்ட பா டத்தைப் படிக்கவாவது, தன்னால் கூடாமலிருந்ததென்றுஞ் சொன்னார். இ வர் ஒவ்வொரு உபாத்தியாரும், கதையுள்ளதாகத்தோடு தானும், பள்ளிக்கூட த்துக்குவரும் நிற்பர்தமான மாணாக்கரோடும், பட்சமாய்ப்பேசி, அவர்களிற் கவலைகொண்டு நடக்கவேண்டுமென்று சொல்லி, ஒரேயொரு பட்சமான வாக்குத் தன்னே டிரட்டித்ததுபோல, மற்றவர்களையும் இரட்டிக்கக்கூடுமென் றுணர்த்தி முடித்தார். இவர் இப்பொழுது ஒரு குருவாயிருக்கிறார்.

அன்றியும் மாணாக்கரின் மனத்திறமை இன்னதென்று மட்டிட்டறிந்து, அதற்குரிய விதமாய் அவர்களைத் தைரியப்படுத்திவிடுவதும், உபாத்தியார் செய்யவேண்டிய ஒரு விசேஷித்த காரியம். சில மாணாக்கர் பிரயாசப்பட் டுங் கூர்மையற்றவர்களாயிருக்கிறார்கள். அதின்பொருட்டாய் அவர்களைக் குற்றப்படுத்தப்படாது. இப்படியான ஒரு குறைவுக்காக உபாத்தி, ஒரு மா ணாக்கன்மேற் குற்றஞ் சொல்வது சரியல்ல. மாணாக்கருக்குட் சிலர் ஞாப கமுள்ளவர்களும், சிலர் ஞாபகமற்றவர்களும், சிலர் விவேகமுள்ளவர்களும், சிலர் விவேகமற்றவர்களுமாயிருக்கலாம். ஒரு மாணாக்கன் கல்வியைச் சம் பாதிக்கும் வல்லமையுடையவனும், மற்றொருவன் ஒழைப்பு புஜபராக்கி ரமும் வல்லமையுடையவனுமாயிருக்கலாம். ஆகையினால் மந்தமுள்ளவனு யிருந்த ஒரு மாணாக்கன், ஞாபகத்திலே அதிக கூர்மையும், விவேகமும், அதிசய மான காரியங்களைச் செய்யத்தக்க திறமையுடையவனுப் வரலுகூடும். பி ன்னே, ஒரு மாணாக்கனுடைய மனதின் தத்துவம் எதிலேயிலே செல்லுமென்ப தை உபாத்தி கூர்மையாய் அறிந்து, அதிலேயே அவ்வவ்மாணாக்கன் உபயோ கப்படும்படி, ஏற்றவிதமாய் அவனைத் தைரியப்படுத்தவேண்டும். அப்படித் தைரியப்படுத்துவதினாலே, ஒரு விஷயாதிலே கொள்ளுங் கூர்மை மற்றதிலு முண்டாகத்தக்கதாயும் வரும். இதற்கு உதாரணமாய் ஒரு உபாத்தியார் சொல்வதாவது, "என்னுடைய பள்ளிக்கூடத்தில் ஒரு பெண்பிள்ளை எல் லாப்படிப்புகளிலும் மெத்தக் குறைவுள்ளவளும், புத்தகத்திலே சித்தனேயற் றவளுமாயிருந்தாள். நான் பள்ளிக்கூடவேளைகளில், பிள்ளைகளுக்கு ஒரு விட்டாற்றியாக, எல்லாருங் கூடிக் கீதம்பாடும்படி சொல்வேன். அப்படி ச்சொன்ன ஒரு சமயத்தில் இந்தப் பெண்பிள்ளையினுடைய குரல் மற்றவர் களுடைய குரலிலும் இனிமையாயிருக்கிறதை நான் கேட்டு, ஜேன் பிள்ளை யே, உன்னுடைய குரல் நன்றாயிருக்கிறது; நீ இனிமேற் பள்ளிக்கூடத்திற் பாட்டைத் தலைக்குநிறவளாயிருவென்று சொன்னேன். இதைக்கேட்டா

ட்டுவங்கி, அவளுடைய மனம் மெத்த முயற்சியடைந்து பாடங்களையுங் கவனித்துக் கேட்டிக்காரியாய் வாத்துவங்குளுள் ஒருநாள் இவள் தன்னுடைய கூட்டாளிகளுடனே கூடி கடந்துபோன சமயத்தில், நான் அவளைக் கண்டு, எல்லது, ஜேன் பிள்ளையே, இப்பொழுது நீ என்றுரைத்த தேறிவருகிறாய், இதற்குக் காரணமென்னவென்று கேட்டதற்கு, இவள் எனக்குத் தெரியாதென்று மாறுத்தரஞ் சொல்ல, இவள் கூட்டாளியோ எனக்கு அந்த நியாயந் தெரியும், இவளே எனக்கதைச் சொல்லியிருக்கிறாளென்றாள். அதென்னவென்று நான் கேட்டதற்கு, நீர் தன்னைத் தைரியப்படுத்தினது தானும் அதற்கு நியாயம் என்றாள். இவள் முன்னே படிப்பிலே கவனமற்றவளாயிருந்தும், பாடுகிறதில் அவளை நான் தைரியப்படுத்திவிட்டதினால், மற்றும் படிப்புகளிலுந் தேறுதலடைய ஏதுவாயிருந்தது.''

இதேபன்றி, வேறொரு பள்ளிக்கூடத்திலே நல வருடங்களின் முன் படித்துவந்த ஒரு மாணாக்கனை அறிக மாதமுள்ளவனுயிருந்தான். ஒருதினத்தில், உபாத்தியார், ஒரு சொல்லின் அர்த்தமறியும்படி இம்மாணாக்கனுடைய அசராநிலை எடுத்துத் திறந்தபொழுது, அதிக வெளிறொற்றைகளிற் படங்கள் சித்திரிக்கப்பட்டிருப்பதைக்கண்டு, இம்மாணாக்கனை அழைத்து, இவைகள் உனதுடையவேலையா? என்று கேட்டதற்கு, அவன், ஆம் என்றான். புத்தகங்களில் இவ்விதமான படங்கள் சித்திரிப்பது நல்லதல்ல; காரணன்றால் இவைகளை அழித்தப்போடுவேன். ஆனும் அவைகளை கோத்தியாய்ச் சித்திரிக்கிறாய்; படமெழுத எப்பொழுதாவது படித்தாயா? என்று கேட்டதற்கு, அவன், இல்லையென்றான். நல்லது, இதிலே உனக்கொரு வரமிருக்கிறதென்று நான் நினைக்கிறேன்; உனக்கு நேரமுள்ள வேளைகளில், எனக்காக ஒரு படஞ் சித்திரித்துக்கொண்டு வரக்கூடுமாளுல் நல்லது; என்றுமும், உன் பாடத்தையும் அசட்டைபண்ணுமல் நன்றாய்ச் சொல்லப்பார்த்துக்கொள் என்று சொன்னார். மறுநாட் காலையிற் பையன் தான் சித்திரித்த படத்தைக் கொண்டுவந்து உபாத்தியாரிடத்தில் கொடுத்தான். இவை பாடங்கொடுத்து முடித்தபின், படமெழுதும்படி உபாத்தியார் இவனுக்கிடங்கொடுத்தார். இம்மாணாக்கனை இயக்கும் வில்லு இன்னதென்பதை இப்பொழுதுதான் உபாத்தியறிந்தான். தன்னை உபாத்தி அறிந்துகொண்டாரென்றதும், மாணாக்கனுக்கு இப்பொழுதே தெரியவந்தது. உபாத்தியிலே சேரமும் படிப்பிலே பிரியமும் இவனிடத்தில் உண்டுபட்டன. இப்பள்ளி இவனுக்கிருந்த வரத்திலே இவனைத்தரியப்படுத்தி விட்டதனுல், இவன் முதன் மாணாக்கரில் ஒரு வனுகிப், பள்ளிக்கூடம் விடமுன் கீர்த்தி முத்திரையையும் பெற்றான். இதற்குப் பிற்பாடு இவன் நல்ல சித்திரகாரனுகி, அதிக பணத்தையீட்டி, ஜரோப்பாவுக்குச் சென்று, புராதன சித்திரகாரருடைய வேலைகளிற் பயின்று, அதிலே முதன்மைபெற்றிருக்கிறான். இப்படித் தன்னை ஆக்கிவைத்த உபாத்திக்கு நன்றியறிதலுக்கடையாளமாக அநேக படங்களைச் சித்திரித்தனுப் பியிருக்கிறான். இவையெல்லாம் உபாத்தி தன் மாணாக்களின் மனுே நிராணயை அறிந்து, அதிலே அவனைத் தைரியப்படுத்தினதினுலேயே உண்டாயின. (இன்னும்வரும்.) W. W. H.

ஞானிகள்.—The Wise. —இருவகை ஞானிகளுண்டு. தேவனைக் கண்டபடியால் அவரை ஆராதிக்கிறவர்கள். அவரைக் காணுதபடியால் அவரைத் தேடுகிறவர்கள். "என் வல்லாத்திற் பொய்மை இல்லையாவென்று" மற் றெல்லாருஞ் சொல்லார்களாக. Cecil.

Digitized by Thavanampalam

SUMMARY OF NEWS.

சமாசாரத் திரட்டு.

The Bishop of Colombo's visit to Jaffna :--மேற்றிராணி வருகை :— கொழும்பு மேற்றிராணியவர்கள் பிறகிட்ட புரட்டாதி மீ 9 உ யாழ்ப்பாணம் வந்து, உடன் கையில், இங்கிலந்து சபையைச்சேர்ந்த குரு மாதரையும் சபைப் பராமரிப்புக்காரரையுஞ் சந்தித்துச், சில வருஷப்புக ளைச் சொன்னார். அத்தகாட்சிகளில் ஐந்து இடப்பங்கிற்கு ஆராதனைகளை நடப்பித்து, 119 பேரை உறுதிப்படுத்தினார். பிற்பாடு சார்ச மிஸியோன் சங்கப் பராமரிப்பின் கீழிருக்கும், கொக்குவிலில்(Kockuville)ஓர் கிராமத் தேவாலயத்திற்கும், பதங்கித்தெருவிலோர் புதிய தேவாலயத்திற்கும், அஸ்திபாரக்கல் வைத்து, 11 உ ஞாயிற்றுக்கிழமை கல்லூர்த் தேவாலயத்திற் குரு அபிஷேக ஆராதனை நடப்பித்தார். அனுராதபுரம் போகும்படி 12 உ பிரயாணமாகி, வழியில், பழையென்கிற இடத்திற் கிலரைத் திடப்படுத்திப் போயினர்.

Ordinations :—குரு அபிஷேகம் :—புரட்டாதி மீ 9 உ வெள்ளிக்கிழமை பிரசங்கியாயிருந்த ஈ. ஈ. எம். உவெல்ச் என்பவர் அளவெட்டிச் சபைக்குக் குருவாக அபிஷேகம் பெற்றார். 11 உ ஞாயிற்றுக்கிழமை, இதுவரைக்கும் உதவிக் குருமாதாயிருந்த ஈ. ஈ. ஈ. கூல், ஈ. ஈ. டி. பி கென்றி. ஈ. ஈ. சோ. சாம்பியன், என்பவர்கள், கொழும்பு மேற்றிராணியவர்களாற் குரு அபிஷேகம் பெற்றார்கள். ஆராதனை வேளையிற், தேவாலயத்தில் இடமில்லையெனத் தக்கதாய்ப், பரதேச சுதேச துரைமாருந், துரைமனியரும், பிறரும் வந்து கூடினர். ஆராதனைமுடிவில் 158 சுதேசக் கிறிஸ்தவர்கள் கர்த்தரின் திருவிருந்தை அனுபவித்தார்கள்.

Evangelical Conference :—சுவிசேஷிய சங்கம் :— நியுயோக்ககரித் கூடும்படிக்காகப், புரோத்தென் தாந்தக் கிறிஸ்தவர்கள் செய்யும் சங்க ஏற்பாட்டு முயற்சி, அதேகருடைய மனதைக் கொள்ளைகொள்ளுகின்றது. இச் சங்க ஏற்பாட்டில் தாம் மிகப் பிரீதிகொண்டிருக்கிறதாக, இங்கிலாந்து இராணியவர்களும், இம்முயற்சியை மிக மெய்ச்சிக்கொண்டோமென்ற ஐக்கதேசப் பிரசாதிபதியும், மற்றும் அதிகாரிகளும், தங்கள் மனவெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையிற் சங்கங்கூடி நடை பெறுகிறதாக இருக்கவேணும். இதின் வர்த்தமானம் யாவர்க்கும் அதிக இதமாயும், சுத்தோதரமாயுமிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லே. அவர்கள் எடுத்தாளும் எவ்விஷயத்திலுந் தேவனே அவர்களுக்கு வழிகாட்டியாயிருப்பாராக.

The Pope.—பாப்பு.—பாப்புவின் லௌகீக அதிகாரம் சீக்கிரம் மூடிவரும் போலே தோற்றுகின்றது. அவருக்குப் பாதுகாப்பாக, றோமையில் வைக்கப்பட்டிருந்த பிரஞ்சிய சேனை தன் ஊருக்குப் போய்விட, எப்போ தண்ணீர் வற்றும், எப்போ மீனைப் பிடிப்பேனெனக் காத்திருந்த கொக்குப் பட்சிபோல், எப்போ சமயம் வாய்ப்குமென்று எதிர்பார்த்திருந்த இத்தாலிய சேனை, றோமையை நோக்கிப் படையெழுச்சி பண்ணுகிறதாக மின்தபால் மூலம் அறிகிறோம். பாப்பு, எங்கேயோ புகலிடந் தேடி, ஓடிவிட்டார் என்னும் புதினம் நம் செவிக்கேற கெடுநாட் செல்லமாட்டாது. பாப்புமார் 8 ம் நூற்றாண்டிற்றான், சபைத்தலைவர் லௌகீக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள்.